பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 25 | வியாழக்கிழமை | 10.08.2023 | அதிர்வு 09

நேற்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆம் திருத்த நடைமுறையாக்கம் குறித்து ஆற்றிய முழு உரையும் 10 - 15 ஆம் பக்கங்களில்.

## எதிர்க்கட்சியும் ஒத்துழைப்பதால்

# தீர்வுக்கு இதுவே நல்ல சந்தர்ப்பம்



### சபையில் மனோ விளக்கம்

கொழும்பு, ஒகஸ்ட் 10

எதிர்க்கட்சியும் எதிர்க்காமல் ஒத்துழைக்க முன்வந்திருப்பதால் தீர்வுக்கு இதுவே அருமையான சந்தர்ப்பம், இதை நன்கு பயன்படுத்திக் கொள்வோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார். 02▶

## பறாளாய் போதி மரம் குறித்து ஜனாதிபதி உரிய நடவடிக்கை

### சித்தர், செல்வத்துக்கு அவர் உறுதிமொழி



– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம் சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலய விவகாரம் தொடர்பில் தாம் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பார் என ஜனாதிபதி ரணில் 07▶



## தமிழர்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த நீங்கள் தயாரா?

### ரணிலிடம் சிறிதரன் நேரடியாகச் சவால்

கொழும்பு,ஓக.10

தமிழர்கள் தனித்து செல்ல விரும்புகிறார்களா, சமஷ்டி 07▶





## நான் யார்? சிங்கள இனவாதியா? அல்லது தமிழரின் ஆதரவாளரா?

### சபையில் ரணில் எழுப்பிய கேள்வி

நீங்கள் (தமிழர் தரப்பினர்) என்னைச் “சிங்கள இனவாதி” என்று குற்றம் சாட்டுகின்றீர்கள். ஆனால் அத்துரலியே தேரர் எம்.பி. என்னை “தமிழ் ஆதரவாளர்” என்கிறார். அப்படியானால் நான் யார் ? – இப்படி நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தமிழர்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தத் தயாரா என்ற சாரப்பட சிறிதரன் எம்.பி. நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சவால் விட்டு நாடாளுமன்றத்தில் கருத்துரைத்தார். 07▶

## ‘13’ தீர்வுக்கான ஆரம்பப் புள்ளி கூட அல்ல தமிழ்த் தேசிய மக்கள் முன்னண. தெரிவிப்பு



“13“ தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியுமல்ல, தீர்வுமல்ல. தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டியே இனப்பிரச்சினையைத் தீர்க்க ஒரேவழியாகும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில்முன்னணியின்செய்திககுறிப்பில் 03▶



### இ ப ரகசியம்

‘சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது’ என்பார்கள். உண்மைதான். யாழ் பல்கலைக்கழகமும் இதற்கு விதி விலக்கல்ல.

வடக்கில் ஊடுருவிக் காலூன்றச் சந்தர்ப்பம் பார்த்திருக்கும் சீனா, 02▶

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்கு வாய்ப்பான சந்தர்ப்பங்களை – துறைகளை – தேடிக் கொண்டிருக்கிறது. கல்வி – உயர்கல்வி என்ற பெயரில், அவற்றுக்கான உதவித் திட்டங்கள் என்ற சாக்கில், யாழ் பல்கலைக்கழகத்துக்குள் ஊடுருவி, கால் பதிக்க அது காய் நகர்த்தியது. விடயம் – விவரம் – புரியாமல், கல்விப் பரிவர்த்தனை என்ற பெயரில் சீனப்பொறியில் யாழ் பல்கலைக்கழகம் சிக்கும் ஏதுநிலைகள் தென்பட்டன.

ஏதோ நமது அயல்நாட்டு தரப்புக்களினதும், சில பிரமுகர்களினதும் நல்லாலோசனை சரியான தருணத்தில் யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்திற்குக் கிடைத்தமையால் அது சீன வலையில் சிக்காமல், சத்தம் சந்தடியின்றிப் பின்வாங்கிக் கொண்டது.

ஆயினும், சீன வலை விரிப்புத் தொடர்ந்து நீடிக்கவே செய்கின்றது.

முன்னர் உயர் கல்வி மாணவர்களுக்கு உதவி திட்டங்கள், கொடுப்பனவுகள் என்ற பெயரிலும், இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று கோதாவிலும் யாழ் பல்கலைக்கழகத்துக்குள் நுழைய முயன்ற சீனா, யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் சுதாகரித்து மீண்டெழுந்து விட்டமையால், சற்றுக் காலம் அடக்கி வாசித்து, அமைதி காத்தது.

இப்போது, செலவுகள் ஏதும் இன்றி, சீனச் சுற்றுலாவுக்கு, இலவசமாக அழைத்துச் செல்கிறோம், ஐந்து மாணவர்களின் பெயர்களையாவது பரிந்துரையுங்கள் என்று சீனத் தூதரகத்திடமிருந்து அழைப்புக்கு மேல் அழைப்பு. கடிதங்களுக்கு மேல் கடிதங்கள்.

ஐந்து நாடுகள், ஐந்து நகரங்கள், ஐந்து ஊர்கள், ஐந்து கிராமங்கள் என்று கோரிக்கேட்டு கிடைக்காமல் போக, ஐந்து வீடுகளையாவது கொடுங்கள் என்று மகா பாரதத்தில் பாண்டவர்களுக்காக துரியோதனாதியாரிடம் மல்லுக்கட்டியமை போல, ஐந்து மாணவர்களையாவது சீனச் சுற்றுலாவுக்கு தாருங்கள் என்று சீனத் தூதரகம் யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுத்தது.

நினைவூட்டலுக்கு மேல் நினைவூட்டல் கடிதங்கள். போதாக்குறைக்கு தொலைபேசி அழைப்புகள். எதற்கும் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் விட்டுக் கொடுத்து இறங்கிப் போய்விடவில்லை.

மாணவர்களின் பெயரை வழங்குவதற்கான கடைசிக் காலக்கெடு கடந்த வாரத்துடன் முடிவுற்றது. கடைசி வரைச் சீனச் சுற்றுலாவுக்கு யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் பெயரைக் குறிப்பிட்டுப் பரிந்துரைக்காமலேயே புறமொதுக்கியது யாழ் பல்கலைக்கழக நிர்வாகம்.

யாழ் பல்கலைக்கழகம் இல்லாவிட்டாலும், தெற்கின் வேறு ஆறு பல்கலைக் கழகங்களில் இருந்து தலா ஐந்து மாணவர்களை சீனச் சுற்றுலாவுக்கு அழைத்துப் போகிறோம் என்ற பெயரில் – தன் முனைப்பில் சீனா உறுதியாக இருக்கிறது.

இதற்கிடையில், சீன தரப்புகளுடன் இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற பெயரில் றுகுணுப் பல்கலைக்கழகம் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் நமது அயல் நாட்டைச் சீற்றத்தில் ஆழ்த்தி இருப்பதாகத் தெரிகிறது.

முதலில் சமுத்திரவியல் கல்வி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் என்றார்கள். அது மெல்ல மெல்ல மாறி, இப்போது செய்மதிப் பரிவர்த்தனைக் கல்வி தொடர்பான ஒப்பந்தம் என்று றுகுணுப் பல்கலைக்கழகத்துக்கு ஊடாக சிக்கலான துறைகளில் கூட்டுச் செயற்பாட்டுக்கு சீனா காலூன்றி விட்டது. இத்துறைகளில் உயர் கல்வி ஆய்வு என்ற பெயரில் இங்கு முன்னெடுக்கப்படக் கூடிய திட்டங்கள் இந்தியத் தரப்பைக் கடும் சீற்றத்துக்கு உள்ளாக்கியிருப்பதாக சில வட்டாரங்கள் தெரிவித்தன.

நிச்சயமாக செய்மதி ஊடாட்டம் தொடர்பான விடயங்களை ஒட்டி, சீனா இலங்கையில் காலூன்றுவது இந்தியாவுக்கு மிகுந்த நெருக்கடியாக இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

நல்ல காலம். இந்த வலையில் – சீனப் பொறியில் – யாழ். பல்கலைக்கழகம் சிக்காமல் தவிர்த்து வருகின்றது.

## தீர்வுக்கு இதுவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று உரையாற்றிய பின்னர் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இடைமறித்துப்பேசினார்.

அச்சமயம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய மூவரின் பெயர்களையும் குறிப்பிட்டு, தேசிய இன பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இதுதான் சரியான தருணம், ஆகவே இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகவே தீர்வு காணுங்கள் என்று அவர் வலியுறுத்திக் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேசிய இனப் பிரச்சனை பற்றியும் 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் பற்றியும், அது தொடர்பான தமது யோசனைகள் பற்றியும் திரும்பத் திரும்ப இங்கே கூறினாலும் கூட, அவரது பக்கத்தில் – அதாவது அரசாங்கப் பக்கத்தில் இருக்கக்கூடிய எம்.பிக்கள் இது விடயத்தில் அவருக்கு ஆதரவளிக்கிறார்களா என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கின்றது.

அதன் உண்மை தன்மையை நாங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். அதேபோல சற்றுமுன் பேசிய தயாசிறி ஜெயசேகர எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்க எழுந்த அரசாங்கத் தரப்பின் பிரதான கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மஹிந்த ராஜபக்ஷ சார்பாகத் தாம் பேசுகின்றார் எனக் கூறி மஹிந்த “13 பிளஸ்” பற்றி பேசுகின்றார் எனக் கூறினார்.

அப்படியானால் சரி. மஹிந்த ராஜபக்ஷ இன்னமும் “13 பிளஸ்” என்ற நிலைப்பாட்டில் இருக்கிறார் என அவர் கூறுகின்றார் என்று நினைக்கின்றேன். இங்கே மஹிந்த ராஜபக்ஷவும் அமர்ந்திருக்கின்றார். அவரும் இதனை மறுக்கவில்லை.

ஆகவே மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு “13 பிளஸ்”தான். “13 பிளஸ்” என்ற ஒரே நிலைப்பாட்டில் இருங்கள். ஆனால் ஒரு தடவை 13 என்றும், பின்னர் “13 பிளஸ்” என்றும் மற்றொரு சமயம் “13 மைனஸ்” என்றும் கூறுகிறீர்கள். அப்படிச் சொல்லக் கூடாது. ஒரே நிலைப்பாட்டில் இருங்கள். அதுதான் மிகவும் முக்கியமானது.

மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கின்றேன். 2009 யுத்தம் முடிவுற்ற காலகட்டத்திலே ஒருமுறை அவரைச் சென்று சந்தித்த நான் அப்போது ஒன்றை அவருக்குக் கூறினேன்.

யுத்தத்தை முடித்து வைத்தவர் என்ற காரணத்தினால் நீங்கள் சிங்கள மக்கள் மத்தியிலே ஒரு மகாநாயக்கராக கருதப் படுகிறீர்கள். வரலாறு உங்களுக்கு அப்படியொரு வாய்ப்பைத் தந்திருக்கிறது.

தயவு செய்து அதிகாரத்தை பகிர்ந்து, தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணுங்கள். அப்படியானால் மக்கள் உங்களைப் போற்றுவார்கள். ஆனால் மஹிந்த ராஜபக்ஷ அவர்களே! அதனை நீங்கள் செய்யத் தவறி விட்டீர்கள்.

அதையிட்டு நான் கவலை அடைகிறேன். ஆனாலும் கூட இன்று, இப்பொழுதாவது நாங்கள் அதைச் செய்து முடிப்போம்.

இங்கே குமார் வெல்கம பேசும்போது ஒரு விடயத்தைச் சொன்னார். அதாவது இந்த நாட்டில் இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டே ஆக வேண்டும் என்று கூறினார். அதைப்போல் தீர்வு காணுவோம். ஒன்றை மட்டும் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

இன்று சஜித் பிரேமதாஸா எதிர்க்கட்சித் தலைவர். அவர்கள் இந்த விடயத்தில் உங்கள் கால், கைகளை இழுத்து விழுத்த முயலவில்லை. வரலாற்றில் வழமையாக பச்சைக் கட்சி அரசமைப்பைத் திருத்தி, பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொழுது நீலக்கட்சி அதனை எதிர்க்கும்.

அதேபோல நீலக்கட்சி செய்யும் பொழுது, பச்சைக்கட்சி எதிர்க்கும். இதுவே வரலாறாக இருந்தது. ஆனால் இன்று அப்படியல்ல. சஜித் பிரேமதாஸா உங்கள் காலை வாரவில்லை.

முதல் முறையாக இலங்கை வரலாற்றிலேயே எதிர்க்கட்சியும் எதிர்க்காமல் இருக்கும் நிலை உள்ளது. அதிலும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறீர்களானால் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக கூட சஜித்தின் கட்சி கூறியிருக்கின்றது. இதுதான் நல்ல சந்தர்ப்பம்.

ஆகையினால் தீர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுங்கள். 13 ஐப் பற்றி நாங்கள் பேசுவோம். அதில் உள்ள அதிகாரங்கள் பற்றி பேசுவோம். பேச்சு நடாத்துவோம்.

அது அரசலமைப்பில் இருக்க கூடிய சட்டம். இதில் ஒன்றை மட்டும் கூறி வைக்க விரும்புகிறேன். எதிரணி பக்கம் சிலர் பேசினார்கள். ஆனால் எந்தக் காரணத்தைக் கொண்டும் 13 ஆவது திருத்தத்தையோ மாகாணசபை முறைமையையோ இலங்கை அரசமைப்பில் இருந்து அகற்றவே முடியாது.

அது உள்ளேயே வந்துவிட்டது. ஆகையால் அகற்ற முடியாது என்பதை கூறி வைக்க விரும்புகிறேன். இதைத் தீர்த்து முடியுங்கள் எனக் கூறி வைக்க விரும்புகிறேன். – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலின் குடுமி சும்மா ஆடாது

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பார்கள். காரியத்தோடுதான் அது ஆடும்.

அது போலவே 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் நடைமுறையாக்கம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய யோசனைத் திட்ட உரை கூட, காரியத்துடன்தான் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. இனப் பிரச்சினைத் தீர்வுக்காக என்ற நோக்கத்துடன் மட்டும் அது முன்வைக்கப்பட்டதாகத் தோன்றவில்லை. அதை யும் விட ஆழமான காரண, காரியங்கள் அத்திட்ட நகர்வுக்குப் பின்னால் பொதிந்திருக்கின்றன என்பதை அத்திட்டத்தை மேலோட்டமாக வாசித்து, நோட்டமிடுபவர்களே புரிந்து கொள்வர்.

ஏதோ 13 ஆவது திருத்த விடயம் குறித்து உடனடித் தீர்மானங்கள் எடுத்து, மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்தும் உத்தேசத்துடன்தான் இந்த அரசியல் நகர்வை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கின்றார் என்று நீங்கள் யாரேனும் கருதுவீர்களேயானால் ஏமாந்துதான் போவீர்கள்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டியே - அடுத்த ஆண்டு முற்பகுதியிலேயே - நடத்தி, அதில் வெற்றியீட்டி, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குத் தமது ஜனாதிபதிப் பதவி அதிகாரத்தைத் தக்க வைக்கும் ஒரே நப்பாசையில் செயல்படுகின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்காக மேற்கொள்ளும் அரசியல் சதுரங்கக் காய் நகர்த்தல்தான் - அல்லது கொளுத்திப் போடும் வெடிதான் - அவரின் நேற்றைய யோசனைத் திட்ட அறிவிப்பு.

அவரின் திட்டப்படி, அந்த யோசனை அம்சங்களை ஆராய்ந்து, பரிசீலித்து, அவற்றின்படி நடவடிக்கை எடுத்து, தீர்மானங்களை மேற்கொண்டு, அவற்றுக்குச் செயலுருக் கொடுக்க ஆண்டுகள் பல பிடிக்கும். புதிய சட்டங்கள், ஒழுங்கு விதிகளை உருவாக்கி, அடுத்த மாகாண சபைத் தேர்தலை நடத்த இரண்டு வருடங்களாவது செல்லும்.

அதாவது, தமது அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபை தேர்தல் நடக்காமல் பார்த்துக் கொண்டு, அதே சமயம் மக்களுக்கு - குறிப்பாக சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கு - மாகாணத் தேர்தலுக்கு ஆயத்தங்கள் நடக்கின்றன என்று 'குதிரைக்கு முன்னால் கரட் கட்டும்' பூச்சாண்டியை நாசூக்காகக் காட்ட அவர் எத்தனிக்கின்றார்.

ஒருபுறம் மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட அதிகாரங்களைசெயலுருக் கொடுத்துநடைமுறைப்படுத்துவதற்காக 13 ஆம் திருத்தத்தை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கின்றார் என்று சிறுபான்மையினருக்கு காட்டுவது. மறுபுறம் 13 பற்றியும், நல்லிணக்கத் தீர்வு பற்றியும் பேசினாலும், பொலிஸ் அதிகாரத்தைக் கூடப் பகிர மாட்டேன் என்று பேரினவாத மேலாண்மை முகமூடி அணிந்த முகத்தைத் தெற்குக்குக் காட்டுவது.

இந்த இரட்டை நிலைப்பாடு, தாம் முற்கூட்டியே நடத்த உத்தேசித்திருக்கும் ஜனாதிபதி தேர்தலில் தமக்கு வெற்றி வாய்ப்பைத் தேடித் தரும் என்று அவர் நம்புகின்றார்.

அந்த அடிப்படையில் கட்டவிழும் யோசனைத் திட்டம்தான் நேற்று அவர் நாடாளுமன்றத்தில் அறிவித்தது.

# மொனராகலையில் பனிக் கட்டி மழை!



பல மாதங்களாக நிலவிய கடும் வறட்சியான கால நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து மொனராகலையின் பல பகுதிகளில் நேற்றுப் பிற்பகல் கடும் மழை பெய்துள்ளது.

மழையுடன் பனிக் கட்டி மழையும் பெய்ததாக 'நெத் நியூஸ்' செய்தியாளர் தெரிவித்தார். மொனராகலை, ஹீலந்தாவ, வெடிகும்புர மற்றும் மஹகொடயாய ஆகிய பிரதேசங்களில் இவ்வாறு பனி மழை பெய்துள்ளது.

இது சுமார் இரண்டு நிமிடங்கள் நீடித்ததாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

## 13 தீர்வுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கடந்த வாரம் 13ஆம் திருத்தத்தினை நடைமுறைப் படுத்துவது தொடர்பான கட்சிகளின் யோசனைகளை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கட்சித் தலைவர்களிடம் கோரப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு தொடர்பில் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரின் ஒப்பமிட்ட கடிதம் நேற்று அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் –

13ஆம் திருத்தம் இனப்பிரச்சினைத் தீர்வின் தொடக்கப் புள்ளியாகவோ இறுதித் தீர்வாகவோ ஏற்றுக் கொள்ள முடியாது என்பதனைத் தெளிவுபடுத்தி –

1987 ஆம் ஆண்டிலேயே தமிழ்த் தரப்புக்களால் 13ஆம் திருத்தம் நிராகரிக்கப்பட்டது என்பதனைச் சுட்டிக் காட்டி – வடக்கு – கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப் படையிலான சமஷ்டி அரசியல் யாப்பின் மூலம் மட்டுமே 75 வருடங்களாகப் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும் எனபதனைத் தெளிவுபடுத்தி கடிதம் எழுதப்பட்டுள்ளது.

13ஆம் திருத்தம் 1987 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட போது அதனைத் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தொடக்கப்புள்ளியாகக் கூட ஏற்றுக் கொள்ள முடியாதெனக் குறிப்பிட்டு அதனைச் சட்டமாக நிறைவேற்ற அனுமதிக்க வேண்டாமென்றும் அதனைத் தடுத்து நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி அப்போதய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு.சிவசிதம்பரம், செயலாளர் அமிர்தலிங்கம், சிரேஷ்ட உபதலைவர் இரா சம்பந்தன் ஆகியோர் ஒப்பமிட்டு அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு அனுப்பிய கடிதமும் இணைக்கப்பட்டுள்ளதுடன் –

கடந்த 2016 ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து தயாரித்த தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டித் தீர்வு யோசனை வரைவையும் இணைத்து நேற்றைய தினம் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியினால் கையளிக்கப்பட்டது. -என்று உள்ளது.

# 300 பார் லைசென்ஸ் ரணில் வழங்கியுள்ளார்

## சாதனையை அம்பலப்படுத்துகிறார் ஜே.வி.பியின் எம்.பி. விஜித ஹேரத

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சராக பதவி யேற்றதன் பின்னர் 250 முதல் 300 வரையிலான மதுபான விற்பனை நிலைய (பார்) அனுமதிப்பத்திரங்களை வழங் கியுள்ளார் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இன்று தெரிவித்துள்ளார்.

புதிய பந்தயம் மற்றும் கேமிங் லெவி (திருத்தம்) சட்டமூலம் நாட்டில் உள்ள சூதாட்ட விடுதிகளுக்கு ஏற்கனவே உள்ள நான்கு உரிமங்களைத் தவிர வரம்பற்ற எண்ணிக்கை யிலான உரிமங்களை வழங்க அனுமதிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பந்தயம் மற்றும் கேமிங் லெவி (திருத்தம்) சட்டமூலம் மீதான விவாதத்தின் போதே அவர் இதனை குறிப்பிட்டுள் ளார்.

சிங்கப்பூரில் இரண்டு சூதாட்ட விடுதிகள் மட்டுமே உள்ளன. மலேசியாவில் ஒரே ஒரு சூதாட்ட விடுதி மட்டுமே உள்ளது.

புதிய பந்தயம் மற்றும் கேமிங் லெவி (திருத்தம்) சட்டமூலம்



நிறைவேற்றப்பட்ட பின்னர், நாட்டில் வரம்பற்ற சூதாட்ட விடுதிகள் நிறுவப்படும். இது ஒரு தீவிரமான சூழ்நிலை. - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்.நகரில் இரு உணவகங்கள் நேற்று சீல் வைத்து மூடப்பட்டன







யாழ் மாநகர சுகாதார வைத்திய அதி காரி பாலமுரளியின் அறிவுறுத்தலின் பிரகாரம் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழுவினரால் யாழ் நகர் பகுதி உணவகங்களில் திடீர் பரி சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சுகாதார சீர்கேட்டுடன் யாழ்.பஸ் நிலையத்திற்கு பின்புறம் இயங்கிய ஒரு அசைவ உணவகமும், யாழ்.பண்ணை பகுதியில் அமைந்துள்ள ஒரு அசைவ உணவகமும் பொது சுகா- தார பரிசோதகர்களின் பரிசோதனையில் சிக்கின.

இரு உணவக உரிமையாளர்களிற் கும் எதிராக நேற்றுப் புதன்கிழமை யாழ் மேலதிக நீதிவான் நீதிமன்றில் யாழ்நகர் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவ னால் வழக்கு தாக்கல் செய்யப்பட் டது.

வழக்கை விசாரணை செய்த நீதவான் உணவக உரிமையாளர்களை தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுவித் ததமையுடன், குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் வரை உணவகங்களை சீல் வைத்து மூடுமாறு கட்டளை வழங்கி னார். அத்துடன் வழக்கை வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதனைத் தொடர்ந்து பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் அந்த உணவகங்கள் இரண்டும் நேற்று சீல் வைத்து மூடப்பட்டன.

# மடு மாதா உற்சவத்தில் இம்முறை 7 லட்சம் பக்தர்கள் பங்குபற்றுவர்

## ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி







மன்னார்,ஓக.10

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலியில் இம்முறை நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 7 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொள்ள உள்ள நிலையில், வருகை தரும் பக்தர்களின் நலனைக் கருத்திக் கொண்டு சகல முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணித் திருவிழா தொடர்பாகவும் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயும் 2ஆவது கூட்டம் நேற்றுப் பகல் 11 மணியளவில் மடு திருத்தல மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை எஸ்.ஜே.பெப்பி சோசை அடிகளார், சுகாதார திணைக்கள அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ், இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்வரும் 15ஆம் திகதி இடம்பெறவுள்ள மடுத் திருவிழா தொடர்பாகவும் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதன் போது ஆயர் கருத்து தெரிவிக்கையில் –

“மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலியில் இம்முறை நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 7 இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கு அமைவாக உரிய திணைக்களங்களின் உதவியோடு, மடு திருத்தலத்திற்கு வரும் மக்களின் தேவைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக நீர், சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து போன்ற தேவைகள் தொடர்பில் உரிய திணைக்களங்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது நவநாள் திருப்பலிகள் இடம்பெற்று வருகின்றது. எதிர்வரும் 14 ஆம் திகதி மாலை வேஸ்பர் ஆராதனையும் 15 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுத்தலும் இடம்பெறும்.

இம்முறை திருவிழா திருப்பலி திருத்தந்தையின் பிரதிநிதி தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட உள்ளது.

ஏற்கனவே மடு திருத்தலத்தில் உள்ள விடுதிகள் எல்லாம் மக்களுக்கு வழங்கப்பட்டு விட்டன. மேலும் தற்காலிகமாக 500இற்கும் மேற்பட்ட தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டு மக்கள் வருகை தந்துள்ளனர். மக்களுக்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து மடு சந்திக்கான விசேட ரயில் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேலும் மன்னாரில் இருந்து அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. – என்றார்.

# பிறந்த குழந்தையைக் கொன்று வீதியில் வீசிய பெற்றோர் கைது

முல்லேரியா பண்டார மாவத்தை பகுதியில் பிறந்த சிசுவைக் கொன்று வீதியில் வீசிய பெற்றோரை முல்லேரியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அக்குழந்தையின் தந்தையெனக் கூறப்படும் நபர் பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரது வீட்டில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு சிசுவைப் பெற்றெடுத்துள்ளமையுடன், சிசுவைக் கொன்று வீதிக்குக் கொண்டு சென்று வீசியுள்ளனர் என விசாரணைகளின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இரத்தக் கறைகளைத் தொடர்ந்து சென்ற பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்குச் சென்று அந்த ஜோடியைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான கணவனும் மனைவியும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம்தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எமக்கான அதிகாரங்கள் எங்களிடமே தாருங்கள்!



## நாடாளுமன்றத்தில் நேற்று சாணக்கியன் கோரிக்கை

கொழும்பு,ஓக.10

எமக்கான அதிகாரங்கள் எமது கைகளில் தரப்பட்டால் மாத்திரமே எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமைச்சரவையில் தமிழர் ஒருவர் அமைச்சராக அங்கத்துவம் வகித்தாலும் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. இந்தக் காரணத்தினாலேயே, தமிழர்கள் அதிகாரப் பரவலாக்கலைக் கோருகிறார்கள்.

உண்மையில் மீன்பிடித்துறை அமைச்சரிடம் கிழக்கு மாகாணம் தொடர்பாக பல பிரச்சினைகளை முன்வைத்திருந்தாலும் இதுவரை அவற்றுக்கான தீர்வுகள் கிடைக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பில் அதிகூடிய மீன்பிடித் தொழிலாளர்கள் இருக்கின்றனர். எனவே அவர்களது வாழ்வாதாரப் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும்.

உரிய துறைக்கு ஒரு தமிழரே அமைச்சராக இருக்கின்றார். எனவே ஓர் அமைச்சரவை அந்தஸ்து இருந்தும்கூட இதுவரை தீர்வுகள் பெறப்படவில்லை என்பதால்தான் நாங்கள் அதிகாரப் பரவலாக்கம் மூலம் எமக்கான அதிகாரங்களைக் கோருகின்றோம்.

எமது கரங்களில் அதிகாரங்கள் தரப்பட்டால் நாமே எமது பிரச்சினைகளைப் பார்த்துக் கொள்ள முடியும். என அவர் மேலும் தெரிவித்தார்.

# இரண்டு மாதங்களில் 33 சிறுவர்கள் யாழில் போதைக்கு அடிமையாகினர்



யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு மாத காலப்பகுதிகுள் 33 சிறுவர்கள் போதைக்கு அடிமையானவர்கள் என இனங்காணப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கூட்டத்தின்போதே அதிகாரிகளால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் போதைக்கு அடிமையாகி வரும் நிலைமை அதிகரித்து வருகிறது. கடந்த 2 மாத காலப்பகுதிக்குள்ளேயே 33 சிறுவர்கள் போதைப்பொருள் பாவனையாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 11 பேர் ஹெரோயின் போதைப்பொருளுக்கும் 08 பேர் ஐஸ் போதைப்பொருளுக்கும் 07 பேர் கஞ்சா போதைப்பொருளுக்கும் ஏனையவர்கள் போதை மாத்திரைகளுக்கும் அடிமையாகியுள்ளனர் என இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கும் அதிக எண்ணிக்கையான சிறுவர்கள் அடிமையாகியுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டது.

# வீதியைப் புனரமைக்கக் கோரி கிளிநொச்சியில் கவனவீர்ப்பு



கிளிநொச்சி பல்லவராயன்கட்டு, கிராஞ்சி ஊடாக வலைப்பாடு செல்லும் வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி கிராஞ்சி மக்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் கிராஞ்சி அந்தோனியார் ஆலயத்திலிருந்து பேரணியாக கிராஞ்சி பொதுச்சந்தை வரை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த வீதியைப் புனரமைப்பதற்கான பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டாலும் அவை இடையிலே கைவிடப்பட்டிருக்கின்றன என அவர்கள் குறிப்பிட்டனர்.

பல வருட காலமாகத் திருத்தப்படாத இந்த வீதியூடாகப் போக்குவரத்துச் செய்வதில் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

# ரணிலின் உரைக்கு சம்பந்தன் அவசரப்பட்டு பதில் தராராம்!

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வின் அவசியம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய விசேட உரையை முழுமையாகக் கேட்டேன். ஆனால், அவரின் உரை தொடர்பில் அவசரப்பட்டுப் பதிலளிக்க விரும்பவில்லை. உரிய நேரத்தில் பதில் வழங்குவேன்."

– இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

'13ஆவது அரசமைப்புத் திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு இந்த நாட்டின் அதியுயர் சட்டமாகும். அதை நாம் புறக்கணிக்க முடியாது. நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு நிறைவேற்று அதிகாரமும், நாடாளுமன்றமும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும்' – என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்திருந்தார்.

13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான தனது முன்மொழிவுகளையும் எதிர்காலத் திட்டங்களையும் நாடாளுமன்றத்தில் முன்வைத்து விசேட உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த உரை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தனிடம் நேற்றிரவு வினவியபோது,

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் எமது உறுதியான நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்துக்குப் பின்னர் அவர் தலைமையில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்திலும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நாம் எழுதிய கடிதத்திலும் தெளிவாகத் தெரிவித்துள்ளோம். இந்த நிலையில், 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வின் அவசியம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய விசேட உரையை முழுமையாகக் கேட்டேன். ஆனால், அவரின் உரை தொடர்பில் அவசரப்பட்டுப் பதிலளிக்க விரும்பவில்லை. உரிய நேரத்தில் பதில் வழங்குவேன்." – என்று குறிப்பிட்டார்.

## பறாளாய் போதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விக்கிரமசிங்க தங்களுக்கு வாக்குறுதி அளித்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று நாடாளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதன் போது சுழிபுரம் பறாளாய் அம்மன் ஆலய அரச மரம் தொடர்பில் வெளியாகிய வர்த்தமானி அறிவித்தல் குறித்தும், அதனால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் பற்றியும் மற்றும் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் அவர்கள் ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இச் சந்திப்பு தொடர்பாக சித்தார்த்தன் எம்பி தெரிவித்தவை வருமாறு:-

குறிப்பாக சங்கமித்தை அங்கு வந்தார் எனக் கூறி இந்து ஆலயத்தை தொல்லியல் என்ற போர்வைக்குள் கொண்டு வருகின்ற திட்டமிட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்.

பறாளாய் முருகன் ஆலய மரம் தொல்லியலுக்கு உரியது என்ற வர்த்தமானி வெளியீடு தேவையில்லாத பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகையினால் வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெற வேண்டுமென வலியுறுத்தியிருந்தோம்.

இந்த வர்த்தமானி ஏன் வந்தது என்று ஆராய்வதுடன், அந்த மரம் தொடர்பில் விஞ்ஞான ரீதியில் பகுப்பாய்வு செய்து உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி உறுதியளித்தார். – என சித்தார்த்தன் எம்.பி. குறிப்பிட்டார்.

## தமிழர்கள் மத்தியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடிப்படையில் வாழ விரும்புகிறார்களா என்பதை அறிய வடக்கு மற்றும் கிழக்குத் தமிழர்கள். மலையகத் தமிழர்கள் மற்றும் கொழும்பில் வாழும் தமிழர்களிடம் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த நீங்கள் தயாரா? – என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி.யான சிவஞானம் சிறிதரன் ஜனாதிபதியிடம் நேரில் சவால் விடுத்தார்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய விசேட உரையைத் தொடர்ந்து, சபையில் எழுந்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு சவால் விடுத்தார்.

இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வு ஒன்று வரக் கூடாது என்பதே ஜனாதிபதியின் உரையைத் தொடர்ந்து உரையாற்றியவர்களின் கருத்துக்களாகவுள்ளன.

தேர்தலும் இல்லை, தீர்வும் இல்லை. காலத்தை இழுத்தடித்து, இனவாதத்தைக் கிளறி விடவே இந்த 13 ஆவது திருத்த உசுப்பேத்தலை தூக்கிப் போட்டிருக்கின்றீர்கள்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண எத்தனை சிங்கள தலைவர்கள் தயாராக இருக்கின்றீர்கள்? தமிழர்கள் தனித்து செல்ல விரும்புகிறார்களா, சமஷ்டி அடிப்படையில் வாழ விரும்புகிறார்களா என்பதை அறிய வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் கொழும்பில் வாழும் தமிழர்களிடம் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த அரசு தயாரா? – என அவர் கேள்வியெழுப்பினார்.

## நான் யார்?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்குப் பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்படி கேள்வியை எழுப்பினார். அரசமைப்புக்கு உட்பட்ட வகையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நான் தயாராகவுள்ளேன், தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதை நான் அறிந்துள்ளேன் என்று ஜனாதிபதி அச்சமயம் சொன்னார்.

எனினும், சர்வஜன வாக்கெடுப்பை நடத்த அரசு தயாரா என்ற சிறிதரன் எம்.பி.யின் சவால் கேள்வி தொடர்பில் அவர் எதனையும் கூறவில்லை.



# ராகுல் காந்தி கடும் குற்றச்சாட்டு: இந்திய மக்களவையில் அமளி!



மணிப்பூர் விவகாரம் தொடர்பில் இந்திய காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி முன்வைத்த குற்றச்சாட்டினால், இந்திய மக்களவையில் நேற்று அமைதியின்மை ஏற்பட்டது.

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் நிலவும் இன மோதலை பிரதமர் நரேந்திர மோடி கையாண்ட விதம் குறித்து காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி விமர்சனங்களை முன்வைத்தார்.

எனினும், மக்களவையில் ராகுல் காந்தி உரையாற்றிய போது இந்திய பிரதமர் நரேந்திர மோடி இருக்கவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களவையில் மத்திய அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணை மீது இரண்டாவது நாளாக நடைபெற்ற விவாதத்தில், உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அதன்போது, பாரதீய ஜனதா கட்சியினர் கோஷமிட்டனர். பதிலுக்கு இந்திய கட்சியினரும் கோஷம் எழுப்பியதால் சற்று நேரம் அவையில் அமைதியின்மை ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து உரையாற்றிய ராகுல் காந்தி, பிரதமர் நரேந்திர மோடி மணிப்பூரை இரண்டாக பிளவுபடுத்திவிட்டார் என்று தெரிவித் துள்ளார்.

## மணிப்பூர் வன்முறையை அரசியலாக்கவேண்டாம்!

**- மக்களவையில் அமித் ஷா**

பிரதமர் நரேந்திர மோடி மீது நாட்டு மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று மக்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.

அத்துடன், மணிப்பூர் வன்முறை மீது நடைபெறும் அரசியல் வெட்கக்கேடானது என்றும் எதிர்க்கட்சிகளை அவர் காட்டமாக விமர்சித்தார்.

மணிப்பூர் விவகாரத்தில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீது மக்களவையில் நேற்று நடந்த விவாதத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் மோடி மீது, இந்த அரசு மீது நம்பிக்கை போய்விடவில்லை. மாய தோற்றத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இல்லா தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளனர். எதிர்க்கட்சிகளின் உண்மையான குணம் என்ன என்பதை இந்த நம்பிக்கையில்லா பிரேரணை அம்பலப்படுத்தும்.

அரசைப் பாதுகாக்க ஊழல் செய்வது என்பதுதான் முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் குணம். சுதந்திரத்துக்குப் பின்னர் மிகப் பெரிய அளவில் நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்ற பிரதமர் என்றால், அவர் நரேந்திர மோடிதான். மக்கள் மத்தியில் பிரதமர் மோடிக்கு மிகப் பெரிய புகழ் இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

## கேரள மாநிலத்தின் பெயர் கேரளம் என்று மாற்றம்!



இந்தியாவின் கேரளா மாநிலம் கேரளம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் கேரளா மாநிலத்தில் பினராயி விஜயன் தலைமையில் இடதுசாரி கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது.

பொது சிவில் சட்டத்திற்கு எதிராக கேரளா சட்டசபையில் நேற்று முன்தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், கேரள மாநிலத்தின் பெயரை 'கேரளம்' என்று மாற்ற அம்மாநில அரசு முடிவு செய்தது.

இதற்கான தீர்மானம் சட்டசபையில் கொண்டு வரப்படுவதாக கூறப்பட்டது. இது தொடர்பான தீர்மானத்தை முதலமைச்சர் பினராயி விஜயன் நேற்று தாக்கல் செய்தார்.

மாநில பெயர் மாற்ற தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்ற நிலையில், நேற்றைய தினமே சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. கேரளா என்ற பெயரை கேரளம் என அனைத்து அதிகாரப்பூர்வ கோப்புகளிலும் மாற்ற மத்திய அரசை வலியுறுத்தி சட்டசபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

## மக்களவையில் மோடி பதிலுரை!

மணிப்பூர் வன்முறை தொடர்பாக மத்திய அரசுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் நம்பிக்கை இல்லா பிரேரணைக்கு பிரதமர் நரேந்திர மோடி இன்று பதிலுரை வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மக்களவையில் நேற்று இதனை அறிவித்தார்.

இதேவேளை, மத்திய அமைச்சர்கள் ஸ்மிருதி இரானி, அமித் ஷா ஆகியோர் நேற்றைய விவாதத்தில் பங்கேற்று பதில் விவாதத்தை முன்வைத்திருந்தனர்.

# சீன தலைநகர் பீஜிங்கில் கடும் மழை: 33 பேர் பலி, 18 பேரை காணவில்லை!





சீன தலைநகர் பீஜிங்கில் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 33 பேர் உயிரிழந்துள்ளதுடன், 18 பேர் காணாமல் போயுள்ளனர்.

பீஜிங்கில் கடந்த 140 ஆண்டுகளில் இல்லாத அளவில் கடும் மழை பெய்ததால், நகர் முழுதும் வெள்ளக்காடாக மாறியுள்ளது. இதனால் அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

மேற்கில் தொடர்ந்து பெய்த கன மழையால் 59 ஆயிரம் வீடுகள் சரிந்து வீழ்ந்துள்ளன. கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேரின் வீடுகள் சேதமடைந்துள்ளன. 15 ஆயிரம் ஹெக்டேர் பயிர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

100 இற்கும் மேற்பட்ட பாலங்களும் வீதிகளும் சேதமடைந்துள்ளன. பாதிக்கப் பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

சேதத்தின் அளவைக் கருத்தில் கொண்டால், நகரை மீண்டும் கட்டியெழுப்ப 3 ஆண்டுகள் வரை ஆகும் என பீஜிங் துணை மேயர் சியா லின்மாவோ தெரிவித்துள்ளார்.

# பிரான்ஸில் தீ விபத்து: 11 பேர் உயிரிழப்பு!



பிரான்ஸில் விடுமுறை விடுதியொன்றில் ஏற்பட்ட பாரிய தீயினால் 11 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜேர்மன் எல்லையிலிருந்து 70 கிலோமீற்றர் தூரத்திலுள்ள வின்ட்ஸென்ஹெய்ம் நகரில் நேற்று இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த விடுதியொன்றிலேயே தீப்பற்றியுள்ளது. 9 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள் ளதாகவும் மேலும் இருவரை காணவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போனவர்களும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தீ தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், தீ பரவியமைக்கான காரணம் தெரியவில்லை எனவும் கூறப்படுகிறது.

# இம்ரான் கான் மேன்முறையீடு!

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், ஊழல் வழக்கில் தனக்கு அளிக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளார்.

இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றத்தில் இம்ரான் கானின் சட்டத்தரணிகள் மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தனர்.

இஸ்லாமாபாத் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்க வேண்டும் எனவும் இம்ரான் கானுக்கு பிணை வழங்க வேண்டும் என்பதும் தமது கோரிக்கையாகும் என இம்ரான் கானின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

# 530 நாட்களை கடந்த யுத்தம்!

சிறப்பு ராணுவ நடவடிக்கை என பெயரிட்டு கடந்த ஆண்டு ரஷ்யாவினால் உக்ரைன் மீது மேற்கொண்ட இந்த ஆக்ரமிப்பு 530 நாட்களை கடந்தும் நடைபெற்றுக்கொண்டுள்ளது.

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பிற்கு எதிராக உக்ரைன், அமெரிக்கா உட்பட பல மேற்கத்திய நாடுகளின் பொருளாதார மற்றும் ஆயுத உதவிகளை கொண்டு ரஷ்யாவை தீவிரமாக எதிர்த்து வருகிறது.

இந்த போர் இரு தரப்பிலும் வீடுகளும், கட்டிடங்களும் சேதமடைந்து பல அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுவதும் நிகழ்ந்தேறிய வண்ணம் உள்ளது.

இந்நிலையில் அண்மையில் சில மாதங்களாக ட்ரோன் எனப்படும் ஆளில்லா விமானங்களை அதிகளவில் பயன்படுத்தி இரு நாடுகளும் தாக்குதல்களை நிகழ்த்தி வருகின்றன.

இவ்வாறு உக்ரைனினால் இரண்டு டிரோன்கள் ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவை நோக்கி ஏவப்பட்டது. அவை ரஷ்யாவின் விமானப்படையினால் தாக்கி அழிக்கப்பட்டது.

மொஸ்கோவின் தெற்கு பகுதியில் உள்ள டொமோடிடோவோ பகுதியின் மீது ஏவப்பட்ட ஒரு டிரோனை ரஷ்யா இடைமறித்து வீழ்த்தியது.

அதேபோல் ரஷ்யாவின் தலைநகரின் மேற்கு பகுதியில் உள்ள மின்ஸ்க் நெடுஞ்சாலையின் மேலே இன்னொரு டிரோனையும் ரஷ்யா இடைமறித்து வீழ்த்தியது.

வீழ்த்தப்பட்ட ட்ரோன்களின் பாகங்கள் தாக்கப்பட்டு காயமடைந்ததாகவோ அல்லது உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகவோ இதுவரை தகவல்கள் வெளியாகவில்லை.

# நேற்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி முன்வைத்த யோசனைத் திட்ட விவரம்



மாகாண சபைகள் தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்து புதிய சட்டங்களை நிறைவேற்றிய பின்னர், நாடாளுமன்றம் உடன்படுமானால் மாகாண சபை தேர்தல் சட்டம் திருத்தத்திற்கு தயாராக உள்ளார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன், மாவட்ட விகிதாசார முறையின் கீழ் தேர்தலை நடத்தவும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாகாண சபைகளுக்கு போட்டியிடும் உரிமையை வழங்கவும், 25 வீதம் அல்லது கூடுதலான பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவும் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அரசமைப்பின் 13வது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான தனது முன்மொழிவுகளையும் எதிர்கால திட்டங்களையும் நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைத்து விசேட உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய அரசாங்கத்தின் அதிகாரப் பட்டியல், மாகாண சபை அதிகாரப் பட்டியல்,ஒருங்கிணைந்த பட்டியல் ஆகியவற்றை மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களைச் சமர்ப்பிப்பதற்கு பிரதமர் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதற்கு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் ஆதரவும் பெறப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்தோடு மாகாண சபைகள் செயற்படும் வரை மாகாண ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்கும் ஆலோசனை சபையொன்றை நியமிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் அரசியல் முறையில் இருந்தோ அல்லது அரசியலில் இருந்தோ அகற்ற முடியாத நிரந்தரமான காரணியாக மாகாணசபை மாறியுள்ளதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பொதுமக்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கக் கூடிய வினைத்திறனான மற்றும் வீண்விரயமற்ற, ஊழலற்ற மாகாண சபைக் கட்டமைப்பொன்றை கட்டியெழுப்புவதன் ஊடாக வலுவான முறைமை மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பு ஏற்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதில் பொலிஸ் அதிகாரம் போன்ற உணர்வுபூர்வமான விடயங்களுக்கு முன்னுரிமை அளிப்பது எந்த விதமான இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு கடினமானதாக அமையலாம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முதலில் ஏனைய அதிகாரங்கள் தொடர்பில் உடன்பாட்டுக்கு வந்து நாட்டின் எதிர்காலத்திற்காக 13 ஆவது திருத்தத்தை கட்டம் கட்டமாக எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

காணாமல் போனவர்களைக் கண்டறியும் நடவடிக்கையை, காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் ஆரம்பித்துள்ளதாகவும், மூன்று மாதங்களுக்குள் பணிகளை நிறைவு செய்யும் நோக்கில் தரவு உள்ளீட்டை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த ஜனாதிபதி காணமல் போனவர்களுக்காக சான்றிதழ் வழங்குவதை துரிதப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஆற்றிய முழுமையான உரை வருமாறு:-

1987ஆம் ஆண்டு அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண சபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. எமது நாட்டில் 36 வருடங்களாக மாகாண சபை முறைமை செயற்பட்டு வருகின்றது. எனினும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் விதம் தொடர்பில் பல சிக்கல்கள் உள்ளன. அத்துடன் மாகாண சபைகள் தொடர்பிலும் பல பிரச்சினைகள் உள்ளன.

நாம் ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால், இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். எமது நாட்டின் அபிவிருத்திக்கும் எதிர்காலத்திற்கும் ஏற்ற வகையில் 13ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் இந்த நாடாளுமன்றத்தில் நாம் அனைவரும் வெளிப்படையாகவும் நடுநிலையாகவும் ஆழமாக கலந்துரையாடிய பின்னர் ஓர் உடன்பாட்டிற்கு வந்தால் மட்டுமே இதைச் செய்ய முடியும். அதனால்தான் அண்மையில் சர்வகட்சி மாநாட்டை ஏற்பாடு செய்தோம்.

இந்த மாநாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன்.

அந்த மாநாட்டில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக எங்களால் முழுமையான உடன்பாட்டை எட்ட முடியவில்லை. அதிகாரப் பரவலாக்கத்திற்கான ஒரு குறிப்பிட்ட தேசிய வேலைத்திட்டம் பற்றி வெளிப்படையான கருத்துக்கள் எதுவும் அங்கு முன்வைக்கப்படவில்லை. சில அரசியல் கட்சிகள் தங்கள் கருத்துக்களை முன்வைக்கத் தயங்குவதும் விருப்பமில்லாமல் இருப்பதும் தெளிவாகியது. மாநாட்டில் பங்கேற்ற சில அரசியல் கட்சிகள் அவநம்பிக்கையை மனத்தில் வைத்துக்கொண்டு இதில் பங்கேற்றன. கடந்த காலங்களில் நடந்த சில சர்வகட்சி மாநாடுகளில் அவர்கள் பெற்ற அனுபவம் அதற்குக் காரணமாக இருக்கலாம்.

இனியாவது நாம் இந்த நிலையை மாற்றுவோம். அரசின் அனைத்து செயல்பாடுகளையும் எதிர்ப்பதுதான் எதிர்க்கட்சியின் பங்கு என்று நினைக்கும் மரபிலிருந்து விடுபடுவோம். எதிர்கட்சிகளின் கருத்தை பொருட்படுத்தாமல் செயல்படும் வழக்கத்திலிருந்தும் விலகி இருப்போம். நாம் அனைவரும் நம்பிக்கையுடனும் பொறுப்புடனும் செயல்படுகிறோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து புதிய பாதையில் முன்னேறினால் மட்டுமே நம் நாட்டை முன்னேற்ற முடியும். அந்த புதிய பாரம்பரியத்தை உருவாக்க நாங்கள் பாடுபடுகிறோம்.

நான் எப்பொழுதும் வலியுறுத்தும் ஒரு விடயத்தை இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். கடந்த காலத்தை கிளறிக்கொண்டிருக்காமல், எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்போம். உங்களுக்கும் எனக்கும் கசப்பான அனுபவங்கள் உண்டு. அது உண்மை. ஆனால் அவற்றைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்காமல் எதிர்காலத்தைப் பற்றி ஆராய வேண்டும். நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்து, நேர்மையான நோக்கத்துடன் ஒன்றிணைந்து பொதுவான முடிவை எடுப்போம்.

13 ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாண சபைகளை அமுல்படுத்துவதில் கடந்த 36 வருடங்களாக நாம் வெற்றி பெற்றுள்ளோமா? தோல்வியடைந்தோமா? அவ்வாறு வெற்றி பெறவோ தோல்வியடையவோ காரணங்கள் என்ன? நாம் இதைப் பற்றி பேசலாம். கலந்துரையாடுவோம். ஆழமாகப் நோக்குவோம். உலகின் புதிய போக்குகளைப் ஆராய்வோம்.

நமது பிராந்தியத்தில், இந்தியா மற்றும் சீனா போன்று மேற்கு நாடுகளான அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய பெரிய நாடுகளும் அதிகாரத்தை பரவலாக்கியுள்ளன. மேலும், பிரித்தானியா, நெதர்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளும் அதிகாரத்தைப் பரவலாக்கியுள்ளன.

சீனாவிலிருந்து ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்டுகிறேன். சீனாவின் சிறுபான்மையினர் மொத்த மக்கள் தொகையில் 9 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளனர். ஆனால் அவர்கள் இந்த சிறுபான்மையினருக்கு வலயங்கள்,கோரளைகள் மற்றும் மாநகரங்கள் போன்ற பல நிர்வாகக் கட்டமைப்புகளில் தன்னாட்சி

(11 ஆம் பக்கம் பார்க்க...)

# நேற்று நாடாளு...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகாரங்களை வழங்கியுள்ளனர்.

தேசியக் கொள்கையின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் ஊடாக, உலகின் பல்வேறு நாடுகள் வெற்றி பெற்றுள்ளன. அந்த நாடுகளில் இருந்து படிப்பினை பெறுவோம். அதையெல்லாம் கருத்தில் கொண்டு நமது நாட்டிற்கு மிகவும் பொருத்தமான கட்டமைப்பை அடையாளம் காண்போம்.

மாகாண சபைகளுக்காக வருடத்திற்கு சுமார் 550 பில்லியன் (55 ஆயிரம் கோடி) ரூபாவை செலவிடுகிறோம். இந்தப் பணத்திற்கு மாகாண சபைகளினால் நியாயம் நடந்துள்ளதா? இந்தப் பணம் மக்கள் நலனுக்காக பயன்படுத்தப்பட்டதா? நாம் கவனம் செலுத்த வேண்டிய முக்கியவிடயம் இது.

இலங்கையில் உள்ள ஒவ்வொருவரும் மாகாண சபையைப் பராமரிக்க 22,000 ரூபாவை செலவிடுகின்றனர். நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒரு மாகாண சபையை பராமரிக்க 88,000 ரூபாவை செலவிடுகிறது. அந்தப் பணத்திற்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு பலன்கள் கிடைக்கிறதா? பல்வேறு அரசாங்கங்கள், பல நாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்காக மாகாண சபை முறையை ஒழிக்க முடியாது.

மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையே உள்ள அதிகாரம் குறித்து தனித்தனியாக தெளிவுடுத்தப்படவில்லை. எனவே, மாகாண சபைக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையிலான விடயதானங்கள் பொருந்தாமல் இருக்கின்றன. பணியாற்றும் போது ஒருவருக்கொருவர் மோதிக் கொள்கிறார்கள். ஒரே பணி இரண்டு இடங்களில் செய்யப்படுகிறது. பணிகள் தாமதமாகிறன. மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு பதிலாக வளர்ந்து வருகின்றன.

இவ்வாறான காரணங்களினால், மாகாண சபைகளை வெள்ளை யானைகள் என்று கூறும் நபர்களும் நாட்டில் இருக்கின்றார்கள்.

எவ்வாறாயினும், அந்த அனைத்து குறைபாடுகளுக்கும் பலவீனங்களுக்கும் மத்தியில், மாகாண சபைகளை இலங்கையின் அரசியல் பாதையில் தீர்க்கமான தாக்கத்தை ஏற்படுத்திய கட்டமைப்பு என்று அழைக்கலாம். மாகாண சபைகள் திறமையான அரசியல் தலைவர்களை உருவாக்கும் மேடையாகவும் நிறைவேற்று அதிகாரம் மற்றும் நாடாளுமன்றத்திற்கான நுழைவாயிலாகவும் மாறியுள்ளன. கடந்த காலங்களில் மாகாணசபை உறுப்பினர் பதவியில் இருந்து அரசியல் பயணத்தை ஆரம்பித்த பலர் நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் ஏனைய பொறுப்பான பதவிகளை வகித்த பல சந்தர்ப்பங்களை நாம் காண முடியும். இன்று இந்தச் சபையில் அமர்ந்துள்ள அமைச்சர்களில் அநேகர், மாகாண சபை உறுப்பினர் பதவி முதல் முதலமைச்சர் பதவி வரை பல்வேறு பதவிகளை வகித்துள்ளனர்.

மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போது, சில அரசியல் கட்சிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தன. சில கட்சிகள் ஜனநாயக முறையிலும், சில கட்சிகள் ஜனநாயகத்திற்கு விரோதமாகவும் எதிர்ப்பு தெரிவித்தன. பல உயிர்கள் பலியாகின. நாட்டின் சொத்துக்களும் தேசிய வளங்களும் எரிக்கப்பட்டன. அது கடந்த காலம். ஆனால் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகள் எவையும், மாகாண சபைகளை இல்லாமல் செய்ய வேண்டும் என்று கூறவில்லை. அந்த அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும் மாகாண சபைகளை பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளனர்.

இங்கு இன்னொரு விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். மாகாண சபை அதிகாரப் பகிர்வு, 13ஆவது அரசமைப்புத் திருத்தம் இந்த நாட்டின் அதியுயர் சட்டமாகும். அதை நாம் புறக்கணிக்க முடியாது. நிறைவேற்று அதிகாரமும், நாடாளுமன்றமும் அதை நடைமுறைப் படுத்த வேண்டும்.

13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான எனது முன்மொழிவுகளையும் எதிர்கால திட்டங்களையும் நான் இந்த சபையில் முன்வைக்கிறேன். அந்த பரிந்துரைகளை ஆழமாக ஆராயுங்கள். உங்கள் யோசனைகளை சமர்ப்பிக்கலாம். அந்தக் கருத்துக்கள் அனைத்தையும் ஆராய்ந்து, மாகாண சபைகளின் வகிபாகம் மற்றும் அவற்றின் எதிர்காலம் குறித்து இறுதித் தீர்மானத்தை எட்ட வேண்டிய பொறுப்பு முழுவதுமாக இந்த கௌரவ சபையையே சாரும்.

முன்னேற்றகரமான ஜனநாயக நாடுகளில் புதிய போக்கு என்ன? மையப் படுத்தப்பட்ட நிர்வாகத்திற்கு பதிலாக பரவலாக்கப்பட்ட நிர்வாகத்தை உருவாக்குதல். அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார விடயங்கள் மக்களுக்கு நெருக்கமாக இருக்கும் வகையில் அதிகாரப் பரவலாக்கம். இதற்காக, உலகின் பல்வேறு நாடுகளில் வெவ்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அதிகாரப் பரவலாக்கம் என்பது நேரடி ஜனநாயகத்தை அணுகுவதற்கான ஒரு வழியாகக் கருதப்படுகிறது.

அனைத்து மக்களும் ஒன்றுகூடி முடிவெடுக்கும் நேரடி ஜனநாயகத்திற்குச் செல்லும் எந்த ஆட்சி முறையாலும் இயலாது. ஆனால் அரசியல், பொருளாதார மற்றும் சமூக செயல்பாட்டில் மக்களின் பங்கேற்பையும் விருப்பத்தையும் வெளிப்படுத்தும் வகையில் ஒரு நிறுவன கட்டமைப்பை உருவாக்க முடியும். மாகாண சபை முறைமை என்பது அதிகாரத்தை மக்களிடம் கொண்டு செல்லும் கட்டமைப்பாகும்.

அதுமட்டுமல்லாமல், அதிகாரத்தை மக்களிடம் கொண்டு செல்வதற்கான பல வழிமுறைகளை அண்மைக்காலமாக ஆரம்பித்துள்ளோம். துறைசார் குழுக்கள் பலப்படுத்தப்படுத்தி, இதில் இளைஞர்களை இந்த நோக்கத்திற்காகவே இணைத்துக் கொண்டோம். மேலும், அடிமட்ட அளவில் மக்கள் ஆட்சியில் பங்கெடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மக்கள் சபைகளை நிறுவதற்கு நாம் பணியாற்றி வருகிறோம். ஜனசபை செயலகத்தை ஆரம்பித்தோம். மாதிரி சட்டசபைகள் அமைக்கப்பட்ட பின்னர், சட்டசபை சட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுப்போம்.

இந்தப் பின்னணியில் மாகாண சபைகள் ஊடாக மக்களுக்கு அதிக அதிகாரத்தை கொண்டு செல்லும் வழிமுறைகளையும் திட்டங்களையும் தயாரிக்க வேண்டும் என நான் கருதுகின்றேன். அப்போதுதான் தேசிய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் நிறுவனமாக மாகாண சபைகளைப் பயன்படுத்த முடியும்.

கடந்த சில வருடங்களாக நாடாளுமன்றத்தின் பல்வேறு குழுக்கள், மாகாண சபைகள் மற்றும் அவற்றின் எதிர்காலம் குறித்து ஆழமாகப்பரிசீலிக்கப்பட்ட பல ஆவணங்களை வெளியிட்டுள்ளன. அதில் ஒன்று எனது தலைமையிலான இலங்கை அரசமைப்புப் பேரவையின் வழிநடத்தல் குழுவால் 2017 செப்டெம்பர் 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கையாகும். இடைக்கால அறிக்கையின் பரிந்துரைகளுக்கு நாடாளுமன்றத்தைப்பிரதிநிதித்துவம்செய்யும்அனைத்துக் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

அரசமைப்பின் 3, 4 மற்றும் 5 ஆகிய பிரிவுகளில் திருத்தம் செய்வது குறித்த பரிந்துரைகள் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்த உத்தேச அரசமைப்புத் திருத்தங்களை நாங்கள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கிறோம்.

பின்வரும் விடயங்கள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1.மாகாண பட்டியலில் உள்ள விடயங்கள் தொடர்பான தேசிய கொள்கைகளை வகுப்பதில் மாகாண சபைகளின் பங்களிப்பைப் பெறுதல்.

2.மாகாண பட்டியலில் உள்ள விடயங்கள் தொடர்பான தேசியக் கொள்கைகளை உருவாக்குவதன் மூலம் மத்திய அரசாங்கத்திற்கு பரவலாக்கப்பட்ட அதிகாரங்களைக் கையேற்பது அல்லது மாகாண சபையால் செயல்படுத்தப்படும் நிறைவேற்று மற்றும் நிர்வாக அதிகாரங்களில் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வது.

3.மேற்படி பரவலாக்கப்பட்ட விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிறைவேற்று மற்றும் நிர்வாக அதிகாரங்கள் மாகாண சபைகளிடமே இருக்கும்.

இடைக்கால அறிக்கை குறித்து கருத்து தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜாதிக்க ஹெல உறுமய, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய கட்சிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்ன ஆகியோர் ஆவணங்களை சமர்ப்பித்தனர். அதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையிலான உறவுகள்

(12 ஆம் பக்கம் பார்க்க...)

# நேற்று நாடாளு...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை மற்றும் மத்திய சுற்றுயக் கூறு தொடர்புகள் பற்றிய உபகுழுவின் அறிக்கை என்பன குறித்தும் கவனத்திற்குக் கொள்ள வேண்டும்.

இந்த அனைத்து ஆவணங்களின் ஊடாகவும், மாகாண சபை முறைமை எமது ஆட்சி கட்டமைப்பில் இருந்து அகற்றப்பட முடியாத ஒரு நிறுவனக் கட்டமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வாகவோ அல்லது அதிகாரப் பரவலாக்கல் அலகாகவோ மாகாண சபைகளை ஏற்காத மக்கள் விடுதலை முன்னணியும் ஜாதிக்க ஹெல உறுமயவும் கூட மாகாண சபை முறைமையில் திருத்தப்பட வேண்டிய விடயங்களும் திருத்தப்படக்கூடாத விடயங்களும் இருப்பதை ஒப்புக் கொண்டுள்ளன.

இவையனைத்தின் ஊடாகவும் மாகாண சபையானது இலங்கையின் ஆட்சி முறையில் இருந்தும் அரசிய லில் இருந்தும் அகற்ற முடியாத ஒரு நிலையான காரணியாக மாறியுள்ளது என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது.

அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை எட்ட முடிந்தால், தேசிய அடையாளத்தைப் பாதுகாத்து ஒரே தேசமாக எழுச்சி பெறவும், நாட்டின் அதிகாரத்தை மக்களிடம் நெருங்கிச் செல்லும் வகையில் பரவலாக்குவதற்கும் வாய்ப்பு கிடைக்கும். மாகாண சபை முறைமை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமன்றி ஒன்பது மாகாணங்களிலும் நிறுவப்பட்டன.

மாகாண சபைகளை சரியான பாதையில் வழிநடத்துவதன் மூலம் தேசிய ஒருமைப்பாடு பாதுகாக்கப்படுகிறது. மறுபுறம், இது மிகவும் திறமையான மற்றும் அதிக சேவை வழங்கும் நிறுவன கட்டமைப்பாக உறுதிப்படுத்த முடியும். பொது மக்களுக்கு நெருக்கமான வகையில் அதிகாரப் பரவலாக்கத்திற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே, மாகாண சபை முறைமையை பொதுமக்களுக்கு ஏற்ற, பொது மக்களின் தேவைகளை நிறைவேற்றும், நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் நிறுவனமாக மேம்படுத்துவதே எமது முதன்மையான நோக்கமாக இருக்க வேண்டும்.

இதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கும் வகையில், பல சட்டமூலங்களை நாடாளுமன்றத்தில் முன்வைக்கவும், பல புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நான் முன்மொழிகிறேன்.

1. பிரதேச செயலாளர்கள் நியமனம்.

2. கல்வி தொடர்பான சேவைகளை நடைமுறைப்படுத்த தேவையான அதிகாரத்தை மாகாண சபைக்கு வழங்குதல்.

மாகாண சபை பட்டியல் அட்டவணை 3, உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைக் கல்வி தொடர்பான அனைத்து அதிகாரங்களையும் செயற்படுத்துதல்.

3.தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பான சேவைகளுக்காக மாகாண மட்டத்தில் சபைகளை நிறுவுதல்.

4.பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரமளித்தல்.

5.விவசாயப் புத்தாக்கம் மற்றும் கீழ் மட்டத்திலான அனைத்து விவசாய சேவைகளையும் வழங்க மாகாண சபைகளுக்கு அதிகாரமளித்தல்.

6.மாகாண சுற்றுலா மேம்பாட்டு சபைகளை நிறுவுதல்.

7.தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழில்கள் தொடர்பான வரையறையை ரூ. 4 மில்லியனில் இருந்து ரூ. 250 மில்லியனாக உயர்த்த கைத்தொழில்கள் சட்டத்தில் திருத்தங்களைச் சேர்த்தல்.

இந்த நாடாளுமன்றம் உடன்படுமாக இருந்தால், இந்த எல்லையை ரூ. 500 மில்லியனாக உயர்த்தத் தயாராக உள்ளோம்.

8. மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட சில பணிகள் இன்னமும் மத்திய அரசாங்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதால் அந்தத் தவறைத் திருத்துதல்

9. 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின்படி மாவட்ட அபிவிருத்தி சபைகளை நிறுவுதல்.

மத்திய அரசாங்கத்தின் தேசிய கொள்கைகளுக்கு அமைவாக ஒவ்வொரு மாகாண சபைகளும் மூன்று வருட அபிவிருத்தி திட்டத்தை தயாரித்தல். மத்திய அரசின் அபிவிருத்தித் திட்டங்களும் அந்தந்த அதிகார எல்லைகளுக்கு ஏற்ற வகையில் இந்தத் திட்டத்திற்குள் உள்வாங்க வேண்டும்.

இந்த மூன்றாண்டு திட்டத்தை மாவட்ட அபிவிருத்தி சபைகள் ஊடாக நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பை மாகாண சபைகளுக்கு வழங்குதல்.

ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இப்பணியில் இணைந்து செயற்படக்கூடிய சட்டரீதியான சூழலை தயார்படுத்துதல்.

தற்போது அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய அரசாங்கத்தின் அதிகாரப் பட்டியல், மாகாண சபை அதிகாரப் பட்டியல், ஒருங்கிணைந்த பட்டியல் ஆகியவற்றை மீளாய்வு செய்து, தேவையான திருத்தங்களைச் சமர்ப்பிக்க பிரதமர் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்காக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளின் ஆதரவும் பெறப்படும்.

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைச் சட்டத்தில் மாகாண சபை அமைச்சரின் பொறுப்புகள், மாகாண அமைச்சு செயலாளரின் பொறுப்புகள் மற்றும் ஏனைய அதிகாரிகளின் பொறுப்புகள் குறித்து குறிப்பாக வரையறுக்கப்படவில்லை. அதன் காரணமாக சில தவறான புரிதல்களும், பிரச்சினைகளும், குழப்பங்களும் ஏற்படுகின்றன. எனவே அவர்களின் அதிகாரங்கள் குறிப்பிடப்படும் வகையில் மாகாண சபைச் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

மாகாண சபைகள் தொடர்பான இந்த சட்டங்களை திருத்தியமைத்து புதிய சட்டங்களை நிறைவேற்றிய பின்னர், நாடாளுமன்றம் சம்மதிக்கும் பட்சத்தில் மாகாண சபை தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு தயாராக உள்ளோம்.

தற்போது, இது தொடர்பாக மூன்று முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1. மாவட்ட விகிதாசார முறையின் கீழ் தேர்தல் நடத்துதல்.

2. மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பத்தை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்குதல்.

3. பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதம் அல்லது அதற்கும் அதிகமாக உயர்த்துதல்.

இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வருவதற்கும் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுப்போம்.

மாகாண சபைகள் செயற்படும் வரை மாகாண ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஆலோசனை சபையொன்றை நியமிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாக மாகாண மேற்பார்வைக் குழுத் தலைவர் அல்லது பிரதானிகள், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் மற்றும் மாகாணத்தில் உள்ள அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்படலாம்.

மேலும், சட்டம் இயற்ற மற்றொரு குழுவை நியமிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறோம். ஆலோசனைக் குழுவின் அனுமதியைப் பெற்ற பிறகு வரைவு சட்டங்களை சட்டமாக்குவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

ஆளுநரும் , பெயரிடப்படும் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்த ஆலோசனை சபைக்கு இணைத்தலைவராக இருக்க வேண்டும். நிறைவேற்று அதிகாரம் தொடர்பான விடயங்கள் ஆராயப்படும் போது ஆளுநர் தலைமை தாங்குவார். சட்டவாக்க விவகாரங்கள் ஆராயப்படும் போது நாடாளுமன்ற உறுப்பினர் தலைமை தாங்குவார்.

தற்போது 45 மாகாண சபை அமைச்சுக்கள் செயற்படுகின்றன. இந்த அமைச்சுக்களுக்கு கண்காணிப்புக் குழுக்களை நியமித்து, வேறு பொறுப்புகள் வழங்கப்படாத நாடாளுமன்ற உறுப்பினர்களை தலைவர்களாக நியமிக்கலாம்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ், மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதில் பொலிஸ் அதிகாரங்கள் மிகவும் உணர்வுபூர்வமான விடயமாக மாறியுள்ளது. எனவே ஏனைய அதிகாரங்கள் தொடர்பில் முதலில் நாம் உடன்பாட்டிற்கு வருவது மிகவும் நடைமுறைச்சாத்தியமானதாக இருக்கும் என்று கருதுகிறேன்.நாம் கட்டம் கட்டமாக இதனை தொடரலாம். உணர்வுபூர்வமான விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டால், எந்த ஒருமித்த கருத்தையும் அடைவது கடினமாக இருக்கலாம். நாம் இறுதியில் இருந்து தொடங்காமல் ஆரம்பத்திலிருந்து தொடங்குவோம்.

எனவே முதலில் ஏனைய அதிகாரங்களை பரவலாக்குவது பற்றி பேசி,

(13 ஆம் பக்கம் பார்க்க...)

# நேற்று நாடாளு...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

பொதுவான உடன்பாட்டை எட்டுவோம். அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான தென் பகுதி முதலமைச்சர்களின் அறிக்கையையும் நாம் அடிப்படையாக எடுத்துக் கொள்ளலாம்.

அனைத்து விடயங்களையும் பொது உடன்படிக்கையுடன் செய்வோம். நாட்டின் எதிர்காலத்திற்காக ஒன்றிணைந்து பொதுவான முடிவுகளை எடுக்கும் பலமும் புத்தியும் இந்த நாடாளுமன்றத்திற்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவோம்.

எவ்வித அரசியல் நோக்கங்களும் இன்றி, நாட்டிற்குள் நிலையான நல்லிணக்கத்தை உருவாக்குவதற்காக வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே எனது நோக்கமாகும். இலங்கையின் அபிவிருத்திக்கு நல்லிணக்கம் அத்தியாவசியமானது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிக்களுடன் அதுதொடர்பில் கலந்துரையாடலை நடத்தியிருந்தேன்.

அந்த சந்திப்பு தொடர்பில் சபையிலிருக்கும் உறுப்பினர்களை தெளிவுபடுத்த வேண்டியது எனது கடமையாகும். அது உத்தேச பயணத்திற்கான தடமாகும் என்ற வகையில் அரசாங்கம் அதனூடாக முன்னேறிச் செல்ல எதிர்பார்க்கிறது. அந்த வகையில் தேசிய நல்லிணக்கத்திற்கு அவசியமான விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியான நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

## பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டம்

இந்த சட்டமூலத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பிலான யோசனைகள் குறித்து கலந்தாலோசித்து இணக்கப்பாடுகளை எட்டிய பின்னர், அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது. உரிய நடவடிக்கைகளின் பின்னர் சட்டமூலம் வர்த்தமானியில் அறிவிக்கப்படும்.

## உண்மையை கண்டறிவதற்கான பொறிமுறை மற்றும் சட்டமூலம்

உண்மையைக் கண்டறியும் பொறிமுறைக்கான இடைக்காலச் செயலகத்திற்கு பணிப்பாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். சட்டம் மற்றும் கொள்கை, மக்கள் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்று பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. இது தொடர்பிலான சட்டம் தயாரிக்கப்பட்ட பின்னர் உரிய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும். குறிப்பாக பங்குதாரர்களுக்கான ஆலோசனைகள், வழிகாட்டல்கள் மற்றும் கொள்கை தயாரிப்புக்கான செயலகத்தை நடைமுறைப்படுத்தவதற்கான பிரதம நிறைவேற்று அதிகாரிகள் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

ஐ.நா பிரதிநிதிகள் உட்பட சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் பரிந்துரைகள் தொடர்ச்சியான மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், அந்தச் செயற்பாடுகள் நிறைவடைந்தவுடன் அமைச்சரவையின் அனுமதிக்கான சட்ட வரைவு சமர்ப்பிக்கப்படும்.

## தேசிய சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் (ONUR) சட்டமூலம்

மூரேசு சட்ட வரைவு அரசமைப்பிற்கு ஏற்புடையதா என்பதை அறிய சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். மேலும், மூரேசு இனால் தயாரிக்கப்பட்ட நல்லிணக்கத்திற்கான தேசிய செயற்திட்டம் எதிர்வரும் காலங்களில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

## நட்டஈட்டுக்கான அலுவலகம்

யுத்தத்தில் காணாமல் போன வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த 203 பேருக்கு ஜுலை 2023 ஆம் ஆண்டு வரை 40.6 மில்லியன் வழங்கப்பட்டுள்ளதோடு இந்தசெயல்முறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகிறது.

## காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் (OMP)

வடக்கு கிழக்கு மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். OMP க்கு கிடைத்த 21,374 முறைப்பாடுகளில், 3,462 மீதான விசாரணைகள் இதுவரை நிறைவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. மேலும், உண்மையைக் கண்டறியும் பொறிமுறையானது முழுமையாகச் செயற்பட ஆரம்பித்த பின்னர் அந்தப் பணிகளை துரிதப்படுத்த முடியும். காணாமல் போனோர் தொடர்பான தகவல்களைக் கோருபவர்கள் இடைக்காலச் செயலகத்தில் விரிவான தகவல்களைச் சமர்ப்பிப்பது சிறந்தது.

OMP காணாமல் போனவர்கள் தொடர்பிலான தேடுதல்களை ஆரம்பித்துள்ளது. மூன்று மாதங்களுக்குள் தரவு உள்ளீடு செயற்பாடுகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. அதே போல் காணமல் போனது தொடர்பில் சான்றிதழ்களை வழங்கும் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. OM மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள கொள்கைகளுக்கமைவாக வழக்குகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் முஅீ க்கு கிடைக்கும் முறைப்பாடுகளை திறம்பட முகாமைத்துவம் செய்வதற்கான வழிக்காட்டல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதற்காக அமைச்சரவை அனுமதியை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், முஅீ ஆனது 24 புதிய சபைகளை உள்ளடக்கியிருக்கும் என்பதோடு, ஓகஸ்ட் அதன் பணிகளை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பரிந்துரை சேவைகளுக்காக மாவட்டத்திற்கு ஒரு உதவிக்குழு வீதம் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

நட்டஈடு மற்றும் காணாமல் போனோர் அலுவலுடன் தொடர்புடைய பிரச்சினைகளை முன்வைப்பதற்கான முழுமையான சுதந்திரம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. முஅீ தற்போதும் தமது வேலைத்திட்டத்திற்கு அமைவாக நேர வரைவை தயாரித்துள்ளது.

எல்.ரீ.ரீ.ஈ செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களுக்கு பொது மன்னிப்பு

விளக்கமறியல் இடப்பட்டவர்கள் 21, மரண தண்டனை விதிக்கப்பட்ட மூவர்,சிறைதண்டனைக் கைதிகள் 22 பேர், உள்ளிட்ட மூன்று பிரிவுகளின் கீழ் கைதிகள் உள்ளனர். அரசமைப்பின் 34(1) சரத்துக்கமைய இறுதி இரண்டு பிரிவுகளிலுமுள்ள கைதிகளுக்கு மாத்திரம் பொது மன்னிப்பு வழங்குதல் தொடர்பில் ஆராயப்படவுள்ளது. அந்த பரிந்துரைகளை கருத்திற் கொண்டு எஞ்சியுள்ள சிறைத் தண்டனைகளை நிறைவு செய்து, 11 சிறைக் கைதிகளை விடுவிப்பதற்காக நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சருக்கு ஜனாதிபதியின் அனுமதி கிடைத்துள்ளது.

## தேசிய காணி ஆணைக் குழுவை நிறுவுதல்

தேசிய காணி ஆணைக்குழு, (NLC) மற்றும் தேசிய காணிக் கொள்கையை விரைவாக நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கைவிடப்பட்ட அரச காணிகளை பிறருக்கு வழங்குவது தொடர்பாக தேசிய காணி ஆணைக்குழு கொள்கை வரைவை (NLC) தயாரித்துள்ளது. அதுகுறித்த மேலதிக ஆய்வுகளையும் முன்னெடுத்து வருகிறது. காணி ஆணைக்குழுச் சட்டமொன்றையும் செப்டெம்பர் மாதத்துக்குள் (டேடூஊ) வழிகாட்டலுக்காக நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. 9 மாகாண பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் 12 பேரை உள்ளடக்கியதாக (NLC)யின் கட்டமைமைப்பை மாற்றியமைக்கவும் எதிர்பார்க்கப்படவுள்ளது.

## காணி பிரச்சினை தொடர்பிலான யோசனைகள்

விசேட குழுவொன்று 2020 ஆம் ஆண்டில் அநாவசியமான வனப்பகுதிகளை விடுவிப்பது தொடர்பிலான தடையுத்தரவொன்றை உயர் நீதிமன்றத்திடமிருந்து பெற்றுக்கொண்டிருந்ததை குறிப்பிட முடியும். அதன் பின்னர் இவ்வருடத்தின் மே மாதத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பலனாக 1985 காணி பயன்பாடு தொடர்பிலான வரைவுக்கமையவும் வனஜீவராசிகள் பாதுகாப்பு பிரதேசங்களை எல்லை நிர்ணயம் செய்யும் இயலுமை தொடர்பிலும் கோரப்பட்டிருந்தது.

இதன் பலனாக, இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, அந்த வனப் பிரதேசங்களை விடுவிப்பதற்கு அமைச்சுக் குழு ஒன்றின் ஊடாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி தடை உத்தரவை நீக்கிக்கொள்வதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, வடக்கு கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் தொடர்பில் மேற்படி காணிப் பயன்பாட்டு வரைபடங்கள், தற்போதைய காணி பாவனை முறைகள் மற்றும் பிரதேச செயலாளர்களின் முன்மொழிவுகளை மையப்படுத்தி தரவுக் கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களுக்கு உரிய தகவல்களை பிரதேச செயலகங்கள் ஊடாக பெற்றுக்

(14 ஆம் பக்கம் பார்க்க..)

# நேற்று நாடாளு...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கொள்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 2 மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னைய தடை உத்தரவை நீக்கிக் கொண்ட பின்னர் பிரதேச செயலாளர் அலுவலக மட்டத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள யோசனைகள் அமைச்சுக் குழுக்களினால் ஆராயப்படவுள்ளது. ஜனாதிபதி செயலாளரின் தலைமையிலான குழுவொன்றினால் காணி தொடர்பிலான பிரச்சினைகள் ஆராயப்படும்.

## தேசிய தொல்பொருள் திட்டமிடல்

நாடு முழுவதிலும் தேசிய திட்டத்தின் கீழ் காணி எல்லை நிர்ணயம் மற்றும் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தொல்பொருள் திணைக்களத்திற்கும் மத்திய கலாசார நிதியத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள், இடங்களை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பன வற்றை முதன்மைப்படுத்தி திட்டமிடுமாறு தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகளை அடையாளம் காண்பதற்கு அல்லது முறையாக கையகப்படுத்துவதற்கு தேவையான செயல் திட்டம் தொல்பொருள் திணைக்களத்தினால் முன்மொழியப்படும்.

தென் இந்தியாவின் புனர்வாழ்வு முகாம்களில் வாழும் இலங்கையர்களுக்கு அனைத்து நாடுகளுக்குமான கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொடுப்பதற்கான வரைபடம்.

தென்னிந்திய புனர்வாழ்வு முகாம்களில் வசிக்கும் 2,678 இலங்கையர்களின் பட்டியல் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு கிடைத்துள்ளது. மேற்கூறிய எண்ணிக்கையில், இலங்கையின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை இரண்டையும் வைத்திருப்பவர்களுக்கு அனைத்து நாடுகளுமான கடவுச்சீட்டுகளை வழங்க முடியும். அந்த ஆவணங்களை வழங்குவதற்கான கால அவகாசம் இரண்டு முதல் நான்கு வாரங்களாகும். தென்னிந்தியாவில் புனர்வாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கையர்களுக்கு அனைத்து நாடுகளுக்குமான கடவுச்சீட்டு வழங்குவது குறித்து பரிசீலிப்பதற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## வடக்கு கிழக்கு மாகாணங்களின் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியமர்த்தல்

வடக்கு மற்றும் கிழக்கில் இடம்பெற்ற மோதல்களினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்காக ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு மாகாண ஒருங்கிணைப்பு அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கின் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தனர் அல்லது அவர்களது நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வாழ்ந்தனர். இயல்பு நிலைக்குத் திரும்பிய பின்னர், அவர்கள் பெரும்பாலும் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர். இது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையான மக்களை வீடு மற்றும் வாழ்வாதார உதவிகளுடன் மீள்குடியேற்றியதன் பின்னரான நிலைமை தொடர்பிலான விவரங்கள் சபையில் சமர்பிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்த குடும்பங்களை மீள் குடியமர்த்தும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. வடக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த வர்களில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளை சேர்ந்தவர்களை மாத்திரமே குடியமர்த்த வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் 15 நலன்புரி நிலையங்கள் உள்ளன. அவற்றில் 136 குடும்பங்கள் உள்ளன. அத்தோடு நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வசிக்கும் 2,175 குடும்பங்கள் உள்ளன. கிளிநொச்சி நலன்புரி நிலையங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் இல்லை. எவ்வாறாயினும் யாழ். குடாநாட்டில் 182 குடும்பங்கள் அவர்களது நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வசிப்பதோடு, பச்சிலைப்பள்ளி பிரிவில் 177 குடும்பங்கள் உள்ளன.

கிழக்கு மாகாணத்தின், திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் மாத்திரமே இடம்பெயர்ந்தவர்கள் வசிக்கின்ற நிலையில் அவர்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வசிக்கின்றனர். அங்கு நலன்புரி நிலையங்கள் எவையும் கிடையாது. இடம்பெயர்ந்தவர்களை மீண்டும் குடியமர்த்துவது தொடர்பில் விசேட அவதானம் செலுத்த வேண்டிய அதேநேரம், அதற்காக தனியார் பகுதிகளை பொதுப் பயன்பாட்டிற்கு அனுமதிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். அந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முறைமையொன்றை தயாரித்து பிரச்சினைக்கு உடனடி தீர்வுகளை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

## முப்படைகளினால் விடுவிக்கப்படவுள்ள காணிகள் - வடக்கு மாகாணம்

யாழ்ப்பாணத்தின் முழுமையான நிலப்பகுதி 253,283 ஏக்கர்களாக காணப்படுவதோடு, 2009 ஆம் ஆண்டில் பாதுகாப்பு படையினரால் 26,812 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டிருந்தது. 2009 இல் படையினரால் கையகப்படுத்தப்பட்டிருந்த காணிகளில் 90% – 92% வரையிலான காணிகள் ஏற்கெனவே விடுவிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய 817 ஏக்கர் அரச காணி, 22,101 தனியார் காணி உள்ளடங்களாக 22,919 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸாரினால் கையப்படுத்தப்பட்டுள்ள நிலையில் காணப்படும் காணியின் அளவு 3754 ஏக்கராகும் என்பதோடு, அவற்றில் 862 - 2892 ஏக்கர் அரச மற்றும் தனியார் காணிகள் உள்ளன.

கீழ்வரும் பிரிவுகள் ஊடாக காணிகளை விடுவிக்க எதிர்பார்க்கப்படுகிறது:

(i) இராணுவம் மற்றும் கடற்படையினரால் அடையாளம் காணப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தில் 1.4 ஏக்கர், கிளிநொச்சியில் 13 ஏக்கர் மற்றும் முல்லைத்தீவில் 20 ஏக்கர் காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட உள்ளன.

(ii) யாழ்ப்பாணத்தில் 3 - 6 மாதங்களுக்குள் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பில் இராணுவத்தினால் அடையாளங் காணப்பட்டுள்ளது.

(iii) பலாலி இராணுவ முகாமில் இருந்து சுமார் 290 ஏக்கர் காணி விவசாயம் மற்றும் பருவகால பயிர்கள் உள்ளிட்ட குறிப்பிட்ட நோக்கங்களுக்காக தற்காலிகமாக விடுவிப்பதற்கப்படவுள்ளது.

(iv) இராணுவத் தளபதியின் பணிப்புரையின் பேரில் வடமாகாணத்தில் தற்போதும் விடுவிக்க முடியாத காணிகளை விடுவிப்பது தொடர்பிலான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன.

இது வடக்கு மக்களிடத்தில் கருத்து வேறுபாடுகளை தோற்றுவிக்கும் விவகாரம் என்பதை நான் அறிவேன். அந்த வகையில் மேற்படி மாகாணத்தில் படையினரால் கையகப்படுத்தப்பட்ட மக்கள் காணிகளை முடிந்த வரையில் விடுப்பதே எனது நோக்கமாகும்.

## வடக்கு கிழக்கு அபிவிருத்து திட்டம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கு விரிவான மற்றும் நடைமுறைத் திட்டங்களை உருவாக்குவது அவசியமாகும். 2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் தேசிய மின்சாரத் தேவையில் 70 வீதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் பூர்த்தி செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. பச்சை ஹைட்ரஜன் மற்றும் பசுமை அம்மோனியா உற்பத்தி மூலம் பிராந்தியத்தின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனைப் பயன்படுத்துவதே வடக்கு மற்றும் கிழக்கு அபிவிருத்தித் திட்டங்களின் முதன்மை நோக்கங்களாகும். இந்த மூலோபாயம் முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் கொழும்பு, பூநகரி மற்றும் திருகோணமலை துறைமுகங்களை பசுமை ஹைட்ரஜன் ஏற்றுமதி மையங்களாக மாற்றுவதும் அவற்றின் நோக்கமாக காணப்படுகிறது.

இந்த துறையில் கூட்டு முயற்சிகளை எளிதாக்க இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு சூரிய மற்றும் காற்றாலை சக்திக்கான முதலீடு மற்றும் ஏற்றுமதிக்கு சாதகமான சூழலை உருவாக்கும் நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம்.

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முதலீடு செய்ய அதானி குழுமம் முன்வந்துள்ளது. கூட்டு அணுகுமுறை இந்த பகுதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று நான் நம்புகிறேன். கூடுதலாக, "வடக்கிற்கு நீர்" திட்டம் பல்வேறு நீர்வளங்களின் வளர்ச்சியைக் கொண்டுள்ளது. இந்த நிலையில், பூநகரி ஏரி மற்றும் மல்வத்து ஓயாவின் நீர்ப்பாசன திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்க அரசாங்கம் ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது. யாழ்ப்பாணக் குளத்திற்கு நன்னீர் கொண்டு வருவதற்கும் இரணைமடு குளத்தின் கொள்ளளவை அதிகரிப்பதற்கும் யாழ்ப்பாணத்திற்கான கங்கை

(15ஆம் பக்கம் பார்க்க...)

# நேற்று நாடாளு...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. சிறிய ஏரிகளை புதுப்பிக்கும் திட்டத்தை நிறைவேற்றுவது முக்கியம். இத்திட்டம் வடமாகாணத்தில் விவசாயம் மற்றும் சூரிய சக்தி துறைகளின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

வடக்கில் வான்வழி மற்றும் கடல்வழி தொடர்பாடல்களை மேம்படுத்துவதும் அவசியம். காங்கேசன்துறை துறைமுகம், வவுனியா மற்றும் பலாலி விமான நிலையங்களின் அபிவிருத்தி மற்றும் வடக்கிலிருந்து இந்தியாவின் தெற்கை இணைக்கும் படகு சேவைகளுக்கான வசதிகளும் உருவாகும்.

காங்கேசன்துறை துறைமுகம், பரந்தன் மற்றும் மாங்குளம் ஆகிய இடங்களில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் அமைக்கப்படுகின்றன. மன்னார் கோட்டை, காங்கேசன்துறை துறைமுகம், தீவுகள் மற்றும் வடமராச்சி ஆகிய பகுதிகளை சுற்றி சுற்றுலா படகு சவாரி திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரில் உள்ள சுற்றுலா தலங்களை மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம். விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தின் கீழ் வன்னியில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்க முயற்சிக்கின்றோம். யாழ்ப்பாணப் பல்கலைக்க வளாகம் உயர் கல்வியில் சிறந்து விளங்கும் இடமாக இருப்பதால், அது ஒரு பல்கலைக் கழக நகரமாக வளர்ச்சியடைவதற்கான சாத்தியம் உள்ளது. அதற்கு மேலதிகமாக ளுடுஜஐவு இன் உதவியுடன் காங்கேசன் துறையில் மற்றுமொரு வளாகத்தை நிறுவுவதற்கான காணியும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அத்துடன் கிழக்கு மாகாணத்தை திருகோணமலையை மையப்படுத்தி அபிவிருத்தி செய்யும் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. திருகோணமலை மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எமது அண்டை நாடான இந்தியாவின் ஆதரவு இலங்கைக்கு கிடைத்து வருகிறது. தொழிற்துறை, வலுசக்தி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் தேசிய மற்றும் பிராந்திய மையமாக திருகோணமலையை மேலும் மேம்படுத்துவ-தற்கான இந்தியாவின் ஒப்பந்தம் மற்றும் திருகோணமலையில் எண்ணெய்க் குதங்களை அபிவிருத்தி செய்வதில் தொடர்ந்து ஒத்துழைப்பது மேலும் பல நன்மை அளிக்கும். கிழக்கு மாகாணம் கடல் விவகாரங்களில் முக்கிய பங்கு வகிக்கிறது. திருகோணமலை ஒரு முக்கிய மூலோபாய துறைமுகமாக மாற்றப்பட வேண்டும். கிழக்கு மாகாண துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதில் பிராந்தியத்தில் பல வேலைத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடுவதும் இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதும் முக்கியமானதாகும்.

இத்துறைமுகத்தின் பொருளாதார செயற்பாடுகள் திருகோணமலை மாவட்டத்தில் மட்டுப்படுத்தப்பட முடியாது. இது அனுராதபுரம், வவுனியா மற்றும் தம்புள்ளை நகரங்களுடன் இணைக்கப்பட வேண்டும், குறிப்பாக வன்னி, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் விவசாய உற்பத்தியின் பெரும்பகுதிக்கு பொறுப்பான மாவட்டங்கள். இந்த மாகாணத்தில் தொழில் வளர்ச்சியில் இந்தியா முன்னணியில் இருப்பதால், ஒரு தொழிற்சாலை வலயம் உருவாக்கப்பட வேண்டும். எனவே, துறைமுகமும் இணைக்கப்படும், அதற்காக கூட்டு பணிக் குழுவை அமைக்க திட்டமிட்டுள்ளோம்.

பொருளாதார அடிப்படையில் கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்காக பல்வேறு விடயங்களை குறிப்பிட முடியும். குறிப்பாக,

கிழக்கு மாகாணத்திற்கு அருகாமையில் அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் தம்புள்ளை கலாச்சார முக்கோணம் அமைந்துள்ளது. இது மட்டக்களப்பு, அறுகம்பே மற்றும் திருகோணமலை கடற்கரைகளுக்கு சுற்றுலா மேம்பாட்டுக்கு வழிவகுக்கும். வெருகல் – அறுகம்பே வரையிலான கடற்கரை அபிவிருத்தி திட்டமான சுபானா ஜுரோங் திட்டத்திற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

குரூஸ் சுற்றுலா முயற்சிகளும் இந்த வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். கிழக்கு மாகாணத்தில் மீன்பிடி, விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புத் துறைகள் நவீனமயமாக்கலுக்கு தயாராக உள்ளன. இந்த நிலையில், மகாவலி தெற்கு கரையில் யு மற்றும் டீ வலயங்கள் திறக்கப்படுவது விவசாய முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

நாடு மூன்றாம் தரப்புக்கு விற்கப்படுகிறது என்ற தவறான எண்ணத்தை கொண்டிருக்கும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள், நாடு வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும்போது, எந்த நாடும் தனியாக முன்னேற முடியாது என்ற இலங்கையின் அனுபவத்தை புரிந்துகொள்வார்கள். நமது அயல் நாடான இந்தியாவுடன் வலுவான உறவில் பேணுவதால்,எமது இயலுமையை மேலும் பலப்படுத்தும். இந்த நாட்டின் இறையாண்மைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் தீங்கு விளைவிக்கும் செயல்களில் நான் ஈடுபடமாட்டேன் என உறுதியளித்திருக்கும் நிலையில், நாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதும் நல்லிணக்கத்திற்கும் வழிவகுக்கும் என்ற நிலைப்பாட்டிலிருந்து அனைவரும் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

சரிந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான கடினமான கால கட்டத்தை இன்று நாம் கடந்து கொண்டிருக்கிறோம். விரைவான பொருளாதார வளர்ச்சியை நாம் அடைய வேண்டிய தருணம் இது. தற்போதைய மாகாண சபை முறைமையில் இவ்வாறான விரைவான அபிவிருத்திக்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக உள்ளன. 1977 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் கீழ் எமது நாடு விரைவான பொருளாதார அபிவிருத்தியை அடைந்தது. ஆனால் யுத்தம் காரணமாக அந்த அபிவிருத்தி தடைப்பட்டது. இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் போரினால் பாதிப்பை எதிர் கொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் யுத்த நடவடிக்கைகளில் நிறைவை காண முடிந்தது. தற்போது யுத்தம் முடிவுற்று 14 வருடங்களாகிறது. ஆனால் அதிகார பகிர்வு மற்றும் மாகாண சபை பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் இயலுமை எமக்கு கிட்டவில்லை.

எனவே, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே தேசமாகச் செயற்படுவோம். நமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வு காண வேண்டும். வேறு எந்த நாடும் அல்லது வெளி தரப்பினால் நமது பிரச்சினைகளை தீர்க்க முடியாது.

எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொண்டு மீண்டும் விரைவான அபிவிருத்தி பாதையை யோசனைக்கு பயணிப்போம்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்று கடந்த ஒரு வருட காலப்பகுதியில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், பொறுப்பு மற்றும் நல்லாட்சி ஆகிய வற்றை உறுதிப்படுத்தும் வகையில் பல முறைமை மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு வேறு எந்தக் கட்சியிடமிருந்தும் வலுவான செல்வாக்கு செலுத்தாத நிலையில், 21ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நான் இந்த சபையில் முன்வைத்தேன். அது நிறைவேற்றப்பட்டது. அதனால், ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.

தேர்தலின் போது நடக்கும் பல்வேறு நிதி முறைகேடுகள் மற்றும் ஏனைய விடயங்களைத் தடுக்கும் வகையில் தேர்தல் செலவுக் கட்டுப்பாட்டுச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

நமது நாட்டிற்கு பெரும் இடையூறாக மாறியுள்ள ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுக்க பலவீனமான சட்டமே காணப்படுகிறது. மிகவும் வலிமையான, சர்வதேச தரத்துக்கு ஏற்ற ஊழல் எதிர்ப்பு சட்டத்தை சபையில் சமர்ப்பித்து நிறைவேற்றியுள்ளோம்.

அரசாங்கங்களின் தேவைகளுக்கேற்ப நாட்டின் நிதிக் கட்டுப்பாட்டை நினைத்தவாறு மேற்கொள்வதைத் தடுப்பதற்காக மத்திய வங்கி சுயாதீன சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இளைஞர் போராட்டங்களில், முறைமை மாற்றம் தேவை என்று வலுவாக வலியுறுத்தப்பட்டது. நமது நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்களும் இந்த முறைமை மாற்ற வேண்டும் என்று கோருகின்றனர். நான் முன்பு குறிப்பிட்ட அனைத்து முன்னெடுப்புகளையும் நாங்கள் முறைமை மாற்றத்திற்கு அடித்தளமாகவே தொடங்கினோம். மாகாண சபைகளிலும் இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

வினைத்திறன் மிக்க, விரயமற்ற, ஊழலற்ற, பொதுமக்கள் நம்பிக்கை கொள்ளக்கூடிய, பொதுமக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கும் மாகாண சபை முறைமையைக் கட்டியெழுப்புவதற்கு வலுவான முறைமை மாற்றத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு எமக்குக் கிடைத்துள்ளது. மக்களை அதிகளவில் ஒருங்கிணைக்கவும் தேசிய ஐக்கியத்தை பலப்படுத்தவும் மாகாண சபைகளைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

இது தொடர்பான எனது முன்மொழிவுகள் மற்றும் வழிமுறைகளை நான் முன்வைத்துள்ளேன். இதனை ஆழமாக ஆராய்ந்து உங்கள் கருத்தை தெரிவிக்கலாம்.

இதனை தொடர்வதற்கான முழு அதிகாரமும் நாடாளுமன்றத்திற்கே உள்ளது. பொது உடன்பாட்டின் மூலம் அந்த நடவடிக்கையை எடுக்குமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். நாட்டின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இந்த நாடாளுமன்றத்திற்கு பலமும் பரந்த அறிவும் உள்ளது என்பதை உறுதிப்படுத்த ஒன்றிணையுமாறு இந்த கௌரவ சபையிடம் கேட்டுக்கொள்கிறேன்.

# பல்கலைக்கழகம், ஜனாதிபதி மட்டுமே கௌரவப் பட்டங்கள் வழங்க முடியும்!

## நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கௌரவ நாமம், கௌரவ பட்டங்களை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் ஜனாதிபதிக்கு மாத்திரமே சட்ட ரீதியில் அனுமதி இருக்கிறது.

வேறு நிறுவனங்கள் இவ்வாறான விருதுகளை வழங்குவதற்கு எந்தச் சட்ட ஏற்பாடுகளும் இல்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது புத்திக்க பத்திரண எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புத்திக்க பத்திரண எம்.பி. இவ்விடயம் பற்றிக் குறிப்பிடுகையில் –

பேராசிரியர், டாக்டர், கலாநிதி, வித்தியாஜோதி, வித்தியா கீர்த்தி, தேசபந்து, தேசகீர்த்தி, தேசமான்ய, விஷ்வகீர்த்தி மற்றும் தேசசக்தி போன்ற கௌரவ நாமங்கள் மற்றும் கௌரவ பட்டங்களை, பதவிகளை அளிப்பதற்கு அதிகாரம் கொண்டுள்ள அரச நிறுவனங்கள் யாவை எனக் கேட்டார்.

அதற்குப் பதிலளிக்கையிலேயே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து பதிலளிக்கையில் –

கௌரவ நாமங்கள், கௌரவப் பட்டங்களை, பதவிகளை அளிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் ஜனாதிபதிக்கு மாத்திரமே சட்ட ரீதியில் அனுமதி இருக்கிறது.

பல்கலைக்கழகம் ஒன்று இவ்வாறான பதவி வழங்குவதாக இருந்தால் அது தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடைமுறை விதிகள் அடங்கிய சுற்று நிருபம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டிருக்கிறது.

அதேபோன்று ஜனாதிபதியால் பிரஜைகளுக்கு இவ்வாறான விருது வழங்க முடியும். இது தொடர்பில் சட்டம் இருக்கிறது. அவ்வாறு விருது வழங்குவதாக இருந்தால், அதற்காகப் பகிரங்க விண்ணப்பம் கோரி, அதனை அமைக்கப்படும் நிபுணர்கள் குழுவால் பரீட்சித்து பார்த்து, பார்த்து அனுமதிக்கப்பட வேண்டும் என்ற நடைமுறைகள் இருக்கின்றன.

இந்த இரண்டு முறைகள் அல்லாமல் வேறு எந்த நிறுவனங்களுக்கும் இவ்வாறு விருது வழங்கச் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. என்றாலும் சில நிறுவனங்கள், அமைப்புகளை நிறுவி விருது வழங்கி வருகின்றன. இது நிறுத்தப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. – என்றார்.

இதன்போது எழுந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன–

இவ்வாறு கௌரவப் பட்டங்கள் வழங்கப்படுவது சட்ட விரோதமாகும். கௌரவ பதவிகளை ஜனாதிபதிக்கு மாத்திரமே வழங்க முடியும். ஆனால் இன்று 15,20 ஆயிரம் ரூபா எனப் பணம் வழங்கி அவர்களுக்குத் தேவையான கௌரவ பட்டங்களைப் பெற நாடு பூராகவும் பல நிறுவனங்கள் இருக்கின்றன. தேசத்துரோகிகளும் இவ்வாறு பணம் வழங்கி தேசபிமானி எனப் பட்டம் பெற்றுக்கொண்டு செயற்படுகின்றனர். அதனால் இதனை நிறுத்த வேண்டும். பாரிய தொழிலாக இது தற்போது நாட்டில் இடம்பெறுகிறது. – என்றார்.

இதற்கு அமைச்சர் சுசில் பதிலளிக்கையில், எதிர்காலத்தில் இவ்வாறான விருது வழங்குவதைத் தடுக்கும் வகையில் நாடாளுமன்றத்துக்குச் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவர நடவடிக்கை எடுப்பேன். – என்றார்.

# வீடுகளில் திருடிய இருவர் மட்டக்களப்பில் கைது!

( கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள இருதயபுரம் பிரதேசத்தில் 4 வீடுகளை உடைத்து பணம், தங்க ஆபரணங்கள், கையடக்கத் தொலைபேசிகளைத் திருடினர் என்ற சந்தேகத்தில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை (08) இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களிடம் இருந்து தங்க நகைகள் மற்றும் கையடக்க தொலைபேசிகளை மீட்டுள்ளனர் என்று பொலிஸ் நிலைய பிரதம பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜீ.எம்.பி.ஆர். பண்டார தெரிவித்தார்.

பூட்டியிருந்த வீடு மற்றும் 3 வீடுகளின் கதவை இரவு வேளையில் உடைத்துத் திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் வீட்டு உரிமையாளர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.



இந்த திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸ் நிலைய பெரும் குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி கஜநாயக்கா தலைமையிலான பொலிஸ் சாஜன் பி.எஸ்.ஹகுமான், பி.எஸ். அருன, வசந்த, சம்பத் ஆகியோர் கொண்ட குழுவினர் மேற்கொண்டு வந்த விசாரணையின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் பீற்றர் போல் உத்தரவிட்டார்.

# கொழும்பில் மின்சாரம் தாக்கி பாடசாலை மாணவி மரணம்

கொழும்பு – கொலன்னாவை பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

பிரத்தியேக வகுப்புக்குச் செல்வதற்காக ஆடையை அழுத்த மின்னமுத்தியை பயன்படுத்திய போதே மின்சாரம் தாக்கியுள்ளளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் பிரபல பெண்கள் பாடசாலை ஒன்றில் தரம் 10 இல் கல்வி கற்கும் சுரேந்திரன் கவிதா (வயது 15) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலத்தை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# கிழக்கு இளைஞர்களுக்கு நீச்சல் பயிற்சிப் பாசறை

(பழுவூரான்)

கிழக்கு மாகாண இளைஞர்களுக்கு சர்வதேச நீச்சல் பயிற்றுனரினால் நீச்சல் பயிற்சிகள் வழங்கும் பயிற்சிப் பாசறை நிகழ்வு மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தலைமையில் மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வை. ஆதம்லெப்பையின் ஏற்பாட்டில், கொழும்பு விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில் சோல்வ் பவுண்டேசன் (Solve Foundation) அனுசரணையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இப் பயிற்சிப் பாசறையின் பிரதான பயிற்றுனராக ஆஸ்ரேலியாவைச் சேர்ந்த சிட்னி ஒலிம்பிக் பார்க் பயிற்றுனர் பஞ்சரத்தினம் தம்பு மேற்கொண்டிருந்தார்.

கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட, நீச்சல் பயிற்றுவிப்பாளர்கள், உயிர்க்காப்பு நீச்சல் கற்கை நெறியை நிறைவு செய்தவர்கள் மற்றும் நீச்சல் வீரர்களுக்கு நீச்சல் தொழில் நுட்பங்கள் மற்றும் பயிற்சிகள் இதன் போது வளவாளரினால் வழங்கப்பட்டன.

சிறந்த நீச்சல் வீரர்களை உருவாக்குவதற்கு இப் பயிற்சி உதவுவதுடன் எதிர் காலத்திலும் இவ்வாறான பயிற்சிப் பாசறைகள் இடம் பெறவுள்ளன. பயிற்றுவிப்பில் கலந்து கொண்ட பயிற்றுனர்கள் மற்றும் நீச்சல் வீரர்களுக்குப் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி.ஈஸ்பரன்,விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பல அதிகாரிகள் பங்கேற்றனர்.







# அம்பாறைக்கு பொறியியலாளர்



(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளராக, பொறியியலாளர் ஏ.எம். ஸாஹீர் நேற்று அம்பாறை அரச அதிபர் அலுவலகத்தில் கடமையேற்றார்.

கல்முனை மாவட்ட பொறியியலாளராகக் கடமையாற்றிய இவர் அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளராக நேற்று கடமையேற்றார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, மேலதிக அரச அதிபர் வீ.ஜெகதீஷன், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். எஸ்.நஜீம், கல்முனை கல்வி வலய கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். அனீஸ், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

# வவுனியா பண்ணை எவருக்கும் இல்லை

## வடக்கு ஆளுனர் தெரிவிப்பு

வவுனியா அரச விதை உற்பத்தின் பண்ணையை எவருக்கும் கையளிக்கும் தீர்மானம் இல்லை என்று வடக்கு மாகாண ஆளுனர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியா குடிமக்கள் பேரவை வவுனியா அரச விதை உற்பத்தின் பண்ணையை வேறுதேவைகளுக்க பயன்படுத்துவதைத் தடுக்க கோரியும் அவ்வாறான திட்டமிருக்கும் பட்சத்தில் அதனை கைவிடுமாறும் வட மாகாண ஆளுனருக்கு கடிதம் மூலமாக தெரியப்படுத்தியிருந்தது.

இதற்கு பதிலளித்துள்ள உதவி காணி ஆணையாளர் க. சிவப்பிரியா வவுனியா அரச பண்ணையை எவருக்கும் கையளிக்கும் தீர்மானம் இல்லை என வடக்கு ஆளுனர் தெரிவித்துள்ளார் என்று குடிமக்கள் பேரவைக்கு தெரியப்படுத்தியுள்ளார்.



# லிந்துலை சரஸ்வதி த.ம.வி. தேசிய மட்டத்துக்கு தகுதி!



**வி.பிரசாந்தன்**

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட லிந்துலை சரஸ்வதி தமிழ் மகா வித்தி யாலயம் தேசிய மட்டக் கரப்பந்தாட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள் ளது.

இன்று (09) மாகாண மட்டப் போட்டி கள் நடைபெற்ற நிலையில், அதில், 16 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில், பல போட்டிகளில் வெற்றி பெற்று மத்திய மாகாணத்தில் முதலாவது இடத்தை பெற்றது.

இப் பாடசாலை அணி, தேசிய மட்டக் கரப்பந்தாட்ட போட்டிக்குத் தெரிவாவது இதுவே முதல் முறை என்பது குறிப் பிடத்தக்கது.

# தமிழக மீனவர் 9 பேருக்கும் ஒத்திவைக்கப்பட்ட சிறை!



இலங்கைக் கடற்பரப்பினுள் அத்து மீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 9 தமிழகக் கடற்றொழிலாளர்களுக்கும் ஒன்றரை வருட சிறைத்தண்டனை விதித்த ஊர்காவற்துறை நீதிவான் நீதி மன்றம் அதனை 5 வருட காலத்துக்கு ஒத்திவைத்துள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த ஜுலை 25ஆம் திகதி அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 9 தமிழக கடற்றொழி லாளர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

மறுநாள் கடற்றொழில் நீரியல் வளங்கள் அதிகாரிகளால் ஊர் காவற்றுறை நீதிவான் நீதிமன் றில் அவர்கள் முற்படுத்தப்பட்டனர். இதன்போது அந்த 9 பேரையும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில், நேற்று முன்-தினம் 09 பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து நடை பெற்ற வழக்கு விசாரணைகளை தொடர்ந்து, இழுவைமடி பயன்பாடு, அனுமதியின்றி தொழிலில் ஈடு பட்டமை மற்றும் இலங்கை கடற்பரப் பினுள் அத்துமீறி நுழைந்தமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்களிலும் 09 பேரும் குற்றவாளிகளாக நீதிமன்றம் அறிவித்தது.

ஒவ்வொருக் குற்றத்துக்கும் ஒவ் வொருவருக்கும் தலா 6 மாத சிறைத் தண்டனை வழங்கி, அதனை 5 வருட காலங்களுக்கு நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

# 2 பிள்ளைகளுடன் பெண்ணை கடத்தும் முயற்சி முறியடிப்பு!

பெண் ஒருவரையும் அவரது இரண்டு குழந்தைகளையும் கடத்த முயன்ற சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை யின் களனிகம பகுதியில் பெண் ஒரு வரையும் அவரது இரண்டு குழந்தை களையும் காரில் கடத்திச் சென்ற போதே இருவரும் கைது செய்யப்பட் டுள்ளனர்.

குடும்பத் தகராறு காரணமாக பண்டார கம பிரதேசத்தில் 37 வயதுடைய பெண் ஒருவரையும் அவரது 15 மற்றும் 7 வய துடைய இரண்டு பிள்ளைகளையும் கடத்த முயற்சிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரகமவில் உள்ள குறித்த பெண்ணின் வீட்டுக்கு காரில் வந்த இருவர், மூவரையும் அந்த வாக னத்தில் ஏறுமாறு கூறி அச்சுறுத் தியமையைத் தொடர்ந்து, தாய் தனது இரு பிள்ளைகளுடன் காரில் ஏறிச் சென் றுள்ளார் என்று முதற்கட்ட விசாரணை யில் தெரியவந்துள்ளது என்று பொலி ஸார் தெரிவித்துள்னர்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.08.2023




உங்களை மகிழ்ச்சியாக வைத்திருங்கள். பாடல்கள் கேட்பதன் மூலம் திருப்தியான மனநிலை காணப்படலாம். உங்கள் கோபத்தை பிறரிடம் காட்டாதீர்கள். உணர்ச்சிவசப்படாதீர்கள்.

இன்று கவனச் சிதறல் காணப்படும். மனம் ஒருமித்து பணியாற்றினால் தான் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலும்.

நீங்கள் உங்கள் அணுகுமுறையில் களிப்புடன் இருக்க வேண்டும். உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க சாதாரணமாகவும் தாராளமாகவும் இருக்க வேண்டும்.

இன்று அதிகரிக்கும் செலவினங்கள் காணப்படும். இன்று உங்கள் செலவுகளை நன்கு கண்காணித்து செலவுகளை தடுக்க வேண்டும்.

மனஅழுத்தம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்க வேண்டாம். முடிந்த அளவு அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருங்கள்.

சகபணியாளர்களுடன் நல்லுறவை பராமரிக்க வேண்டும். பணியிலிருந்து கவனத்தை திசை திருப்ப வேண்டாம்.

உங்கள் துணையுடன் பேசும் பொழுது அமைதியை இழக்காதீர்கள். நல்லிணக்கத்தை பராமரிக்க இது மிகவும் முகக்கியம்.

பணவளர்ச்சிக்கு சுமுகமான நாள் அல்ல. உங்கள் குழந்தைகளுக்காக அதிக அளவில் பணம் செலவழிக்க நேரலாம்.

மனஅழுத்தம் காரணமாக அசௌகரியமாக உணர்வீர்கள். தியானம் மேற்கொள்வது நன்மை அளிக்கும்.




உணர்ச்சிவசப்பட்ட அணுகுமுறை கூடாது. விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஆன்மீக நாட்டமும் ஈடுபாடும் உங்களுக்கு வளர்ச்சியைக் கொடுக்கும்.

உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணிகளைக் கையாள்வதில் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையை நீங்கள் இன்னும் சிறந்த முறையில் புரிந்து கொள்ள வேண்டும். அவர் உங்களை புரிந்து கொள்ள அவகாசம் அளியுங்கள்.

பணம் சம்பந்தமான வளர்ச்சி சிறப்பாக இருக்காது. பொறுப்புகள் அதிகமாக காணப்படும். அதனால் பணம் அதிகமாக செலவு செய்ய நேரும்.

முதுகுவலி காணப்படும். யோகா மேற்கொள்வது மிகுந்த பலனை அளிக்கும்.




இன்று சமநிலையுடன் காணப்படுவீர்கள். இன்று புதிய நணபர்கள் மற்றும் கூட்டாளிகள் கிடைப்பார்கள். இன்று அதிர்ஷ்டமான நாள்.

உங்கள் பணிகளில் மிகுந்த வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் பணிகளில் திருப்தி காணப்படும். புதிய வேலைக்கான வாய்ப்புகளும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இன்று உங்கள் துணையை நீங்கள் நன்றாக புரிந்து கொள்வீர்கள்.

பணம் சம்பந்தமான உங்கள் அதிர்ஷ்டத்துக்கு முயர்சிக்க நிறைய வாய்ப்புகள் உள்ளன. உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

உங்களை திடமாக வைத்திருக்கும் வலிமை உங்களிடம் காணப்படும். உங்களின் ஆற்றலும் அதிகமாக இருக்கும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உங்கள் சாதாரண செயல்கள் இன்று உத்வேகம்அளிக்கும். நீங்கள் பெரிதாகச் சாதித்ததைப் போன்று உணர்வீர்கள்.

பணிகளில் மிகுந்த சவால்களை எதிர்கொள்ள நேரும். ஓய்வுகான நேரம் குறைவாக இருக்கும். உங்கள் பணிகளை முறையாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சரியான முறையில் தொடர்பாடல் கொண்டிருப்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். சரியான தொடர்பாடல் காரணமாக புரிந்துணர்வு அதிகரிக்கும்.

இன்று கணிசமான தொகை சம்பாதிக்க வாய்ப்பு உள்ளது. உங்களின் கடின உழைப்புக்கு ஊக்கத் தொகை அல்லது போனஸ் கிடைக்க வாய்ப்பு உள்ளது.




இன்று சாந்தமாக இருப்பது நல்லது. உங்கள் சபலங்களை இன்று கட்டுப்படுத்த வேண்டும்.

பணியில் இன்னும் நல்ல கவனம் செலுத்த வேண்டும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க அது உதவும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். நல்லிணக்கத்தை பராமரிக்க இதனை தவிர்க்க வேண்டும்.

குடும்பம் சம்பந்தமான காரியங்களுக்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் பணம் அதிக அளவில் செலவு செய்ய நேரும்.

சிறிய உடல்நலக் குறைவு ஒன்றுக்காக உங்கள் தாயாருக்கு மருத்துவ செலவு செய்ய நேரலாம்.




உங்கள் அன்றாட செயல்களை கவனமுடன் கையாள வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். ஆன்மீக காரியங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

பணியிடத்தில் நன்மையான பலன்கள் கிடைக்காது. சகபணியாளர்களின் மூலம் சில தொந்-தரவுகளை எதிர்கொள்ள நேரும். இதனால் நீங்கள் குழப்பமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி பூர்வமாக காணப்படுவீர்கள். இருவரும் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு அதனைத் தவிர்க்க வேண்டும்.

உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான பணம் மட்டுமே உங்களிடம் காணப்படும். கூடுதல் செலவுகள் அல்லது தேவையற்ற செலவுகள் ஏற்படலாம்.




இன்று வெற்றி எளிதாக கிடைக்கும். உங்கள் இணக்கமான தொடர்பாடல் மூலம் மற்றவர்களை மகிழ்விப்பீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி உங்களை வெற்றியின் உச்சததுக்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் பணியில் நீங்கள் மகிழ்ச்சியான ஆச்சரியங்களை காண்பீர்கள். நீங்கள் செய்யும் பணியில் எல்லா விதத்திலும் நீங்கள் மகிழ்ச்சியைக் காணலாம்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வுடன் காணப்படுவீர்கள். அவருடன் நட்பான அணுகுமுறையை மேற்கொள்வீர்கள்.

உங்களிடம் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். பணத்தை பயனுள்ள வழியில் பயன்படுத்துவீர்கள்.

இன்று ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.08.2023




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். இன்று மிகவும் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள்.

நீங்கள் மிகுந்த மன அழுத்தத்துடன் காணப்படுவீர்கள். உங்கள் வெற்றியை அது தடுக்கும். உங்களுக்கு சாதகமாக பலன்கள் அமைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்புடன் நடந்துகொள்ளுங்கள். இதை பராமரிப்பதன் மூலம் நீங்கள் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

உங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு வசதியாக இருப்பீர்கள். அதில் வளர்ச்சியும் காண்பீர்கள்.

தைரியத்துடனும் மனஉறுதியுடனும் காணப்படுவீர்கள். இதுவே உங்களை ஆரோக்கிய நிலையில் வைத்திருக்கும்.




இன்று குறைந்த அளவு நற்பலன்களே கிடைக்கும். வெற்றிக்கு முடிந்த அளவு முயலுங்கள். எப்பொழுதும் நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இன்று உங்கள் பணிகளை தொழில் சார்ந்த முறையில் அணுகுவீர்கள். உங்கள் திறமைகளுக்காக உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் மனதில் நேர்மறை எண்ணங்கள் காணப்படும். அதனால் உங்கள் துணையுடனான உறவு சிறந்து காணப்படும். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பீர்கள்.

அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற உங்கள் நோக்கததுக்குத் தடை ஏற்படும். முடிந்த அளவு பணத்தை சேமிக்க வேண்டும். முதுகுவலி மற்றும் சளித் தொல்லைகளுக்கு ஆளாவீர்கள்.




இன்று உங்களுக்கு தேவை தைரியம். கஷ்டகாலங்கள் கடந்து போகும் நல்ல நாள்கள் வரும் என்ற நம்பிக்கையுடன் இருங்கள்.நம்பிக்கையை இழந்து விடாதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும் பணிகளை முன்னுரிமைப்படி வரிசைப்படுத்தி செயலாற்றினால் கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்தில் முடிக்கலாம்.

உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அவருக்குத் துணையாக அவருடன் எப்பொழுதும் இருப்பீர்கள் என்று நம்பிக்கையளியுங்கள்.

எதிர்பாராத செலவினங்களுக்காக பணத்தை செலவு செய்ய நேரிடும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று சிறப்புடன் காணப்படுவீர்கள். உங்கள் செயல்களில் முன்னேற்றம் இருக்கும். உங்கள் அணுகுமுறையில் கவனத்துடன் இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் வளர்சியைத் தரும்.

பணியிடத்தில் இன்று பணியில் உங்களுக்கு ஆர்வம் அதிகரிக்கும். இன்று பணிகளில் உங்கள் இலக்குகளை அடைவீர்கள். திருப்தியான நிலை காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் சாந்தமாக செயல்படுவீர்கள். உங்கள் துணையுடன் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் நேரத்தை செலவழித்து மகிழ்வீர்கள். இது மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

வெற்றியை நோக்கி செல்லும் மனமும் பணத்தை சேர்க்க வேண்டும் என்ற எண்ணமும் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். இன்று புதிய முதலீடு எடுக்கும் முடிவுகளுக்கு திட்டமிடலாம்.




